மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 3 | 15 - 6 - 54 | இதழ்

ஆனல்பூண்டது ஆணவத்தைத் தாக்கியது !

போப்பாண்டவரின் உத்தரவுகளை மார்ட்டின் லூதர் தீயிலிடும் காட்சி.

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளி நாடு அணா

அண்ணாவும் கழகமும்

1937—38—39-ம் ஆண்டுகளில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் வீறிட்டெழுந்து, ஆணவ ஆட்சியை அலக்கழித்துக்கொண்டிருக்க, அதற்குள் ஆச்சாரியார் அமைச்சர் குழு உலகப் பெரும்போரில் பிரிட்டிஷாருக்கு ஒத்துழைப்பு நல்க மறுத்துப் பதவியைவிட்டு வெளியேற, அது வெளியேறியவுடன் கட்டாய இந்தியும் ஒழிந்துபோக, தமிழக அரசியலுலகில் தெளிவும் அமைதியும் அற்ற நிலை ஏற்பட்டது. ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களெல்லாம் நாட்டையும், அரசியலையும் பற்றிக் கவலைப் படாமல், தங்கள் தங்கள் சுயநலப் போக்கைப் பற்றி மட்டுமே கவலைப் பட்டுக்கொண்டிருந்த நேரம். அந்த நேரத்தில் ஜஸ்டிஸ் கட்சியின் தலைவராக இருந்த பெரியார் இராமசாமி, அரசியலை வெறுத்துவிட்டுச் சுயமரியாதை இயக்கத்தை வலுவடையச் செய்து, சமுதாயத்துறையில் தீவிரமாக வேலை செய்யவேண்டும் என்ற நீடு சிந்தனையில் ஈடுபட்டிருந் தார். அரசியலையும் பொருளாதாரத்தையும் அறவே ஒதுக்கிவிட்டு, வெறும் சமுதாயக் கொள்கையை மட்டும் மேற்கொள்வதைவிட, அர சியல்—பொருளியல்—சமூகவியல் ஆகிய மூன்றும் இணைந்த ஒரு அமைப்பே நாட்டிற்குத் தேவையான நலமெலாம் பயக்கும் என்பது அறிஞர் அண்ணாவின் எண்ணமாக இருந்தது. இந்த அடிப்படையில் பணிபுரிவதற்கான சூழ்நிலையை உருவாக்க, அறிஞர் அண்ணா அவர்கள், 1942-ல் காஞ்சிபுரத்தில் 'திராவிடர்க் கழகம்' என்ற பெயரில் முதன் முதல் கழகம் ஒன்றை நிறுவினார்கள். அதனையொட்டி ஆங்காங்கு சில கழகங்கள் தோன்றவே, பெரியார் இராமசாமி அவர்களும் அந்த அமைப்பை ஏற்றுக்கொள்ளுகிற அளவுக்குச் சூழ்நிலை உருவாகியது.

பிறகு 1944-ல் சேலத்தில் நடைபெற்ற ஜஸ்டிஸ் கட்சி மாநில மாநாட்டில், அதுவரையில் ஜஸ்டிஸ்கட்சியில் புல்லுருவிகளாக இருந்து வந்த பட்டம்—பதவி—பணக்காரத்திமிர்பிடித்தவர்களை வெளியேற்றும் தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றிய அப்பொழுதே, 'பார்ப்பன ரல்லாதார் கட்சி' என்பதைத் 'திராவிடர்க் கழகம்' என்று மாற்றவேண் டும் என்ற தீர்மானத்தையும் கொண்டுவந்து அறிஞர் அண்ணா அவர்கள் நிறைவேற்றினார்கள்.

பிறகு நாளடைவில் கருத்து மேலும் வளர, 'திராவிடர்க்குரிய கழகம்' அதாவது 'திராவிடர்க் கழகம்' என்று இனத்தின் அடிப்படை யில் பெயர் அமைவதைவிட, 'திராவிடத்துக்குரிய கழகம்' அதாவது 'திராவிடக் கழகம்' என்று நாட்டின் அடிப்படையில் பெயர் அமைவது சாலச் சிறந்தது என்னும் உணர்வு ஏற்பட்டது.

1949-ம் ஆண்டில் 'திராவிட முன்னேற்றக் கழகத்'தை நிறுவ முற்பட்டபோது, 'திராவிடம் என்ற இடத்திற்குரிய முன்னேற்றக் கழகம்' என்னும் பொருள்படும்படியாகத் திட்டவட்டமாக அறிஞர் அண்ணா அவர்கள் பெயரிட்டார்கள்.

அமைப்புக்குக் 'கழகம்' என்ற பெயரை இட்டு, அதற்கும் 'திராவிட' என்ற அடைமொழியைக் கொடுத்த பெருமையும், சிறப்புத் அறிஞர் அண்ணா அவர்களைச் சாரும்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

15 - 6 - 54 செவ்வாய்க்கிழமை

கிழக்குப் பாக்கிஸ்தான் ஒரு பாடம்!

கிழக்குப் பாக்கிஸ்தான்—ஆணவ அதிகாரத்தின் வேட்டைக்காடாய்க், கொடுமையின் கூடாரமாய்க், கொடுங்கோலாட்சியின் இருப்பிடமாய் ஆக்கப்பட்டிருக்கிறது, பாக்கிஸ்தான் அரசியலாரால்.

கிழக்குப் பாக்கிஸ்தானின் உரிமை வேட்கையை அவிக்கப் பாக்கிஸ்தானின் பிரதமர் முகமதலி, தம் அடக்குமுறைச் சட்டங்கள் அத்தனையையும் அவிழ்த்துவிட்டிருக்கிறார். 'நவாப் தர்பார்' அங்கு தலைவிரிக் கோலமாய்த் தாண்டவமாடுகிறது!

கிழக்குப் பாக்கிஸ்தானில் பொதுத் தேர்தல் நடைபெற்றது; முஸ்லிம் லீக் கட்சி கடுமையாக முறியடிக்கப்பட்டது; ஐக்கிய முன்னணிக் கட்சியினர் பெருவாரியாக வெற்றிபெற்றனர்; தோழர் பஸ்லுல் ஹக் முதன்மந்திரியானார்; பாக்கிஸ்தான் பிரதமர் முகமதலிக்கும், கிழக்குப் பாக்கிஸ்தான் முதன் மந்திரி தோழர் ஹக்குக்கும் ஆட்சி முறையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது; இருவர்க்குமிடையே கராச்சியில் பேச்சுவார்த்தை நடைபெற்றது சமரசப் பேச்சு முறிந்தது; தோழர் ஹக் டாக்கா திரும்பினார்; அவர் திருப்புவதற்குள் கிழக்குப் பாக்கிஸ்தான் மந்திரிசபை கலைக்கப்பட்டது; கவர்னர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது; தோழர் ஹக் காவலில் வைக்கப்பட்டார்; பிற மந்திரிகளும் காவலில் வைக்கப்பட்டனர்; முன்னணிக் கட்சி எம். எல். ஏக்கள் பலர் கைதுசெய்யப்பட்டனர்; ஊர்வலம், கூட்டம், பேச்சு, எழுத்து எல்லாம் தடைசெய்யப்பட்டன; உரிமைக்குரல் எழுப்பப்படும் இடங்களிலெல்லாம் தடியடிப்பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம், நடைபெறுகின்றன; சிலர் பிணங்களாகச் சாய்கின்றனர்; பலர் ஆஸ்பத்திரிக்குக் காயங்களுடன் செல்கின்றனர்; ஆடவர் பெண்டிர் குழந்தைகள் எல்லோரும் அவதிக்குள்ளாகின்றனர்; பல நகரங்களிலும் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டிருக்கிறது; போர்ப்படையினர் ஊரைச் சுற்றி வந்தவண்ணம் இருக்கின்றனர்; சர்வாதிகாரம் தன் முழுமூச்சுடன் ஆடிப்பாடி மகிழ்கிறது!

ஜனநாயகம் படுகொலைக்குள்ளாகும் கோரக் காட்சி நடைபெறுகிறது. மக்கள் தீர்ப்பு மண்ணோடு மண்ணாகப் புதைக்கப்பட்டுவிட்டது; உலக ஜனநாயக அரங்கில் அங்கம் வகிப்பதாகப் பாக்கிஸ்தான் இன்னமும் வீராப்புப் பேசிக்கொண்டுதானிருக்கிறது!

கிழக்குப் பாக்கிஸ்தானில் மக்களாட்சியைக் கலைத்துவிட்டுக் கவர்னர் ஆட்சியை அமுல் நடத்துவதற்குப் பாக்கிஸ்தான் கூறுவதாகச் சொல்லப்படும் காரணங்கள் இரண்டு. ஒன்று பாக்கிஸ்தான்—அமெரிக்கா உடன்படிக்கையைக் கிழக்குப் பாக்கிஸ்தான் எதிர்ப்பதாகும். மற்றொன்று கிழக்குப்பாக்கிஸ்தான் மேற்குப் பாக்கிஸ்தானோடு பாதுகாப்பு—வெளிநாட்டு விவகாரம்—நாணயச்செலவாணி ஆகியவற்றில் ஒன்றி நிற்கலாமே யொழிய, பிறவற்றில் அது தன்னுரிமையோடு வாழவேண்டும் என்ற கருத்தை வற்புறுத்துவதாகும். இவையிரண்டும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக சர்க்காரின் உரிமை வேட்கையாகும். இந்த உரிமை வேட்கையை அடக்கவே தோழர் முகமதலி சர்வாதிகாரிக்கோலம் பூண்டுள்ளார்.

அமெரிக்கா—பாக்கிஸ்தான் உடன்படிக்கையைக் கிழக்குப் பாக்கிஸ்தானின் புதிய மந்திரிசபை எதிர்ப்பதால், அதனை அகற்றிவிட அமெரிக்கா மிக மும்முரமாகப் பாடுபட்டது என்றும், அமெரிக்காவின் தயவைப்பெறவும், அதனிடம் நல்லபிள்ளை என்று பெயரெடுக்கவும் பாக்கிஸ்தான் அதன் கையில் ஆடும் பொம்மையாக மாறிவிட்டது என்றும் அரசியல் வட்டாரத்தினர் அறிவிக்கின்றனர். அமெரிக்கா பாக்கிஸ்தானை இப்படியெல்லாம் ஆட்டிப்படைக்கும் நிலை, உடன்படிக்கையால் ஏற்பட்டே தீரும் என்ற கருத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் முன்னமே தீர்மானத்தின் மூலம்

சுட்டிக்காட்டியிருக்கிறது. தன்கையால் தன் கண்ணையே குத்திக்கொள்ளுகிற நிலையைப் பாக்கிஸ்தானுக்கு ஏற்படுத்திவிட்டு, அமெரிக்கா வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது.

பாக்கிஸ்தான், தான் பஸ்லுல் ஹக் பக்கமில்லை, அமெரிக்கா பக்கந்தானிருக்கிறேன் என்று காட்டிக்கொள்ள, பழைய கவர்னர் கலிக்குஸ்மானைக் கராச்சிக்கு அழைத்துக்கொண்டு, அமெரிக்காவின் எடுபிடியான இஸ்கான்ட மிர்சா என்பவரைக் கிழக்குப் பாக்கிஸ்தானுக்குப் புதிய கவர்னராக நியமித்திருக்கிறது. இவரிடம் அமெரிக்காவுக்கு நிரம்ப நம்பிக்கை உண்டாம்; இவர்தான் பாக்கிஸ்தான்—அமெரிக்க போர்ப்படை உறவு முறை உடன்படிக்கையை நிறைவேற்றிவைத்தாராம். மிக்கப் போர்ப்படை பாதுகாப்போடு இவர் பதவி ஏற்றுள்ளார்.

பாக்கிஸ்தான் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு ஒரு பக்கம் துணைபோவதோடு, தானே ஒரு ஏகாதிபத்தியமாக ஆகி, வங்கத்தின் உரிமை வேட்கைக்கு மாறுபாடாக அதனை அடக்கி ஆளவும் விரும்புகிறது. முன்பு வங்கத்தின் விருப்பத்திற்கு மாறாக உருதுமொழி ஆதிக்கத்தை நிலைநாட்டுவதில் பிடிவாதத்தைக் காட்டிய காரணத்தால்தான், தேர்தலில் முஸ்லிம் லீக் பெரும் அளவுக்கு முறியடிக்கப்பட்டது. வங்கம் சீறி எழுந்துவிட்டால் அதனை அடக்குவார் யாரும் இருக்கமுடியாது. மொழிப் போராட்டத்தில் அது வெற்றி பெற்றது; உருதுவோடு வங்கமொழியையும் அரசியல் மொழியாக்கிற்று. தனக்கே சில பல தனியுரிமைகள் தேவை என்று சொல்லி, வேட்கை கொண்டு சீறி எழுந்துள்ளது. அதனைத் தனது அடக்குமுறையால் அடக்கிவிடலாம் என்று மேற்குப் பாக்கிஸ்தான் கருதுகிறது. கிழக்குப் பாக்கிஸ்தான் தனி நாட்டுரிமை பெற்றுத் தன்னந் தனியுரிமையோடு வாழும் காலம் நீண்ட தொலைவில் இல்லை என்பதை இப்போதைய நிகழ்ச்சிகள் தெளிவாக்குகின்றன. மேற்குப் பாக்கிஸதானின் நடவடிக்கைகள், அந்த அளவுக்குக் கிழக்குப் பாக்கிஸ்தானைத் துரத்திச் செல்லும் என்பதில் ஐயமில்லை. கிழக்குப் பாக்கிஸ்தானின் தனி வாழ்வு கோரும் ஜனநாயக உரிமையை மேற்குப் பாக்கிஸ்தான் அலட்சியப் படுத்தி, இப்பொழுது அடக்குமுறைத் தாண்டவத்தில் இறங்கியுள்ளது. அதன் எதிரொலியை அது அனுபவித்தே தீரும்.

வங்கத்தில் ஜனநாயகத்தைக் கொலை செய்து வாழும் பாக்கிஸ்தானின் போக்கை, ஜனநாயகத்தில் அக்கரை கொண்ட பிற நாடுகள் கண்டிப்பதைப் போலவே, இந்தியாவின் ஆட்சித் தலைவர்களும் தங்கள் கண்டனத்தைத் தெரிவிக்கிறார்கள். இந்திய அரசாங்கம் எந்த முகத்தையும், வாயையும் வைத்துக்கொண்டு பாக்கிஸ்தானின் செயலைக் கண்டிக்குமோ தெரியவில்லை. பஞ்சாப்பிலும், பெப்ஸ்—விலும் அமைந்திருந்த ஆட்சிகளை அகற்றிவிட்டுக் கவர்னர் ஆட்சியை ஏற்படுத்தியதும், திருவிதாங்கூர் - கொச்சியில் நம்பிக்கையின்மையால் தோற்கடிக்கப்பட்ட ஆளும் கட்சியை ஆட்சிப்பீடத்திலேயே தொடர்ந்து இருக்கவைத்ததும், தேர்தலுக்கு நிற்காத அச்சாரியார் கொல்லைப்புறமாக வந்து ஆட்சிப் பீடம் ஏறுவதற்கான வழி வகுத்ததும் எப்படி ஜனநாயகத்திற்கு ஒத்துவரும் நடவடிக்கைகளோ தெரியவில்லை!

பாக்கிஸ்தான் நடவடிக்கைகளைக் கண்டு சிரிப்பதோடு நின்றுவிடாமல், அதிலிருந்து இந்திய அரசாங்கம் நல்ல பாடத்தைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்திக் கூறுகிறோம். வங்கத்தைப் பொறுத்து மேற்குப் பாக்கிஸ்தான் எப்படி நடந்துகொள்கிறதோ, அப்படித்தான் திராவிடத்தைப் பொறுத்து, இந்திய அரசாங்கம் நடந்துகொள்கிறது. மேற்குப் பாக்கிஸ்தானுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி, வட இந்தியாவுக்கும் ஏற்பட்டே தீரும் என்பதை வட இந்திய அரசாங்கம் இப்பொழுதே உணரவேண்டும். மேற்குப் பாக்கிஸ்தானை எதிர்த்து வங்கம் போர் முழக்கம் செய்யத்துவங்கிவிட்டது; அதுபோலவே திராவிடமும் வட நாட்டு ஆதிக்கத்தை எதிர்த்து உரிமைக் குரல் எழுப்ப ஆரம்பித்துவிட்டது; போர் முழக்கம் கிளப்ப நீண்டநாட்கள் செல்லா.

அடக்குமுறையைக்கொண்டு ஆளும் அரசு நீண்ட நாட்களுக்கு நிலைத்து நின்றதில்லை; அது போல பாக்கிஸ்தான் ஆதிக்கம் நீண்டநாட்கள் நிலைத்து நிற்காது; இறுதியில் வங்கம் வெற்றி பெற்றே தீரும். பொதுத் தேர்தலில் வங்கம் முஸ்லிம் லீகை முறியடித்ததும், தனக்கேற்ற மந்திரிசபையை அமைத்ததும் தன் உரிமைக் குரலை எழுப்பியதும் பாக்கிஸ்தானுக்கு மட்டு

மல்ல இந்தியாவுக்கும் நல்ல பாடம் கற்பிக்கும் என்று கருதுகிறோம். கிழக்குப் பாக்கிஸ்தானிற்கு ஏற்படும் கதி, எதிர்காலத்தில் திராவிடத்திற்கு ஏற்பட்டாலும் வியப்படைவதற்கில்லை. ஆனால் வங்கம் இறுதியில் வெற்றி பெற்றே தீரும்; அதுபோல திராவிடமும் வெற்றிபெற்றே தீரும்.

—ஆசிரியர்.

கழகமும் காமராசரும்

நாட்டின் முன்னேற்றத்திற்கும், மக்களின் முன்னேற்றத்திற்கும், சமூக வளர்ச்சிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் மிகவும் கேடுண்டாக்கும் முறையில், குலத்தொழில் கல்வி முறையைப் புகுத்தியதற்காக அன்பர் ஆச்சாரியாரைத் திராவிட முன்னேற்றக் கழகம் கண்டித்தது. அந்தக் கேடான கல்வி முறையை அன்பர் காமராசர் எடுத்ததற்காக அவரைக் கழகம் பாராட்டிற்று. அவ்வளவுதான்! ஒரு குறிப்பிட்ட செயலைப் பாராட்டிவிட்டதால், திராவிட முன்னேற்றக் கழகம் மந்திரிசபையை முழுக்க முழுக்க ஆதரித்துவிட்டதாகவோ, அது எடுத்துக்கொள்ளும் எல்லா நடவடிக்கைகளையும் ஏற்றுக்கொண்டதாகவோ எப்படிப் பொருள் கொள்ளமுடியும்? இப்படித் திரித்துக் கூறுவதன் மூலம் தங்கள் செல்வாக்கை வளர்த்துக்கொள்ளவும், கழகத்தின் செல்வாக்கை அழித்துவிடவும் கனவு கண்டு கொண்டு சில 'அரசியல் அவசரப் பொறாமைக்காரர்'கள் புன்மை மொழி கூறித்திரிகிறார்கள்.

தோழர் ஆச்சாரியார் தஞ்சை மாவட்டத்தில் சாகுபடியாளர் மசோதாவைக் கொண்டுவந்தபோது, அதில் ஒருசில குறைபாடுகளிருந்தாலும், பெருவகையில் அது போற்றப்படவேண்டியது என்று கருதி, ஆச்சாரியாரின் செயலைத் திராவிட முன்னேற்றக் கழகம் பாராட்டித் தீர்மானம் நிறைவேற்றிற்று. அப்பொழுது ஆச்சாரியார் மந்திரிசபையைக் கழகம் ஆதரித்துவிட்டதாகப் பொருள் கொள்ளமுடியுமா? —பொருள் கொண்டார்களா? அதுபோலவேதான் தோழர் காமராசரின் செயலொன்று பாராட்டத்தக்க வகையில் அமைந்திருந்ததற்காகக் கழகம் பாராட்டுக் கூறிற்று. ஆச்சாரியார் ஆகாத புதிய கல்வித்திட்டத்தைக் கொண்டுவந்தார்; அதனைக் கழகம் எதிர்த்துப் போராடியது. அதுபோலவே, நாளை காமராசர் ஆகாத திட்டம் ஒன்றைப் புகுத்துவாரேயானால், கழகம் அதனை எதிர்த்துப் போராடியே தீரும். காங்கிரஸையும் காங்கிரஸ் மந்திரிசபையையும் கழகம் முன்பெல்லாம் எந்த நோக்கோடு நோக்கிற்றோ, அதே நோக்கில்தான் இப்பொழுதும் நோக்குகிறது என்பதை 'அரசியல் பச்சோந்திகள்' உணரவேண்டும்.

பிற்போக்குக் காங்கிரஸ் ஆட்சியை அகற்ற வேண்டியதும், முற்போக்கு ஆட்சியை நிறுவுவதும், காங்கிரஸ், ஆட்சியில் இருக்கும் வரை அது நன்மை செய்தால் பாராட்டுவதும், தீமை இழைத்தால் எதிர்த்தொழிப்பதும் தாம் காங்கிரஸைப் பொறுத்து திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டிருக்கும் குறிக்கோள்களாகும்; அதுதான் ஒரு ஜனநாயக எதிர்க்கட்சியின் நேர்மையான பண்பாகவும் இருக்கமுடியும்.

தோழர் காமராசரின் ஒரு செயலைத் திராவிட முன்னேற்றக் கழகம் பாராட்டியதே தவிர, அவர் மந்திரிசபையை முழுக்க முழுக்க ஆதரிக்கவில்லை! ஆதரிப்பதாகப் பொருள் படாது என்பதை அரசியல் பித்தலாட்டக் காரர்களுக்கு அறிவுறுத்த விரும்புகிறோம்.

ஆச்சாரியாரின் ஓலம்

அன்பர் ஆச்சாரியார் சென்னை முதன் மந்திரிப் பதவியை விட்டு ஓடியதற்குப் பிறகு, அவரது கண்ணான கல்வித்திட்டமும் விரட்டியடிக்கப்பட்டது. ஆச்சாரியாரும், அவரது தொண்டரடிப்பொடியாழ்வார்களும் குலத்தொழில் கல்வித்திட்டத்திற்கு ஆதரவு தேடுவர், தீவிரப் பிரச்சாரத்தில் இறங்குவர், பொதுமக்கள் சக்தியைத் திரட்டுவர், போராட்டத்தில் ஈடுபடுவர் என்றெல்லாம் எதிர்பார்த்தோம். ஒருவருக்குத் தம் கொள்கையிலே உறுதியான நம்பிக்கையிருந்தால் இப்படிப்பட்ட நடவடிக்கைகளில்தானே இறங்குவார். ஆனால் புதிய கல்வித்திட்டம் எடுக்கப்பட்டவுடன், ஆச்சாரியார் அதுபற்றிக் குறிப்பிடும்போது, "கல்வித்திட்டம் போனால் போகிறது; கதா காலட்சேபம் எல்லா இடங்களிலும் நடைபெற்றால் போதும்" என்று அவ்வளவு எளிதாகக் கூறிவிட்டார். புதிய கல்வித்திட்டத்தைப் புகுத்திய காலத்தில் அவர் காட்டிய வீரம், தீரம், பிடிவாதம், செருக்கு எல்லாம் பிறகு எப்படிப் பஞ்சாய்ப் பறந்துவிட்டனவோ, தெரியவில்லை! அவரது இயல்பு அதுதான் போலும்! ஆனால் ஆச்சாரியார் மீண்டும் ஓலமிட ஆரம்பித்திருக்கிறார்! இனி எந்த வஞ்சகம் பிறக்குமோ!

பி. இராமசாமி மறைவு

திராவிடப் பெருங்குடி மக்களின் ஒரு பெருந் தலைவராய் விளங்கிய சர். பி. தியாகராசரின் பேரரும், வீழ்ச்சியுற்ற பெருங்குடி மக்களின் எழுச்சிக்கு அரும்பாடு பட்டவரும் ஆன நண்பர் பி. இராமசாமி இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டுத் திடுக்கிற்றோம்; இந்தத் துயரச் செய்தி எவருடைய உள்ளத்தையும் குழையச் செய்யும் என்பதில் ஐயமில்லை. அவர் ஈடுபாடு பட்டிருந்த பொது அமைப்புகளும், அவர் ஏற்று நடத்திய பொதுப்பணிகளும் பலப்பல. அவர் சென்னை நகரசபையில் இருபது ஆண்டுக்காலம் பொறியியலாளராகப் (என்ஜினீயராக) பணியாற்றித் தம் கல்வி அறிவையும், தொழில் திறமையையும் செவ்வனே புலப்படுத்திவந்தார். அவர் பல கல்வி நிலையங்களோடு தொடர்பு கொண்டிருந்தார் என்றாலும், வட சென்னை தியாகராயர் கல்லூரியோடு அவர் கொண்டிருந்த தொடர்பு மிகவும் போற்றிப் புகழவேண்டியதாகும். தியாகராய உயர்நிலைப் பள்ளி கல்லூரி ஆகி, அது வளம்பெற்று வளரவேண்டுமென்பதிலே கண்ணுங் கருத்துமாயிருந்து, அல்லும் பகலும் ஓயாது உழைத்து வந்தார். தியாகராயர் கல்லூரி அவரது நினைவுச் சின்னமாக நிற்கிறது என்று கூறினால் அது மிகையாகாது. நாட்டுக்குழைத்த நல்லவர் ஒருவர் மறைந்துவிட்டாரே என்று எண்ணும் போது துக்கம் ஏற்படுகிறது. நடுத்தர வயதிலேயே அவர் இயற்கை எய்திவிட்டது அவரது குடும்பத்தினர்க்கும், நண்பர்களுக்கும் ஆற்றொணாத் துயரைத் தருவதாகும். அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினர்க்கும், உற்றார் உறவினர்க்கும், நண்பர்களுக்கும் நம் ஆழ்ந்த பரிவு உரித்தாகுக!

வட ஆற்காடு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக

இரண்டாவது மாநாடுகள்

வேலூரில் நடைபெறும்

19-6-54 சனி — சமூக மாநாடு

தலைவர்: ஈழத்து அடிகள் பி. ஏ.

துவக்குபவர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

20-6-54 ஞாயிறு — அரசியல் மாநாடு

தலைவர்: கே. ஏ. மதியழகன் பி. ஏ.

துவக்குபவர்: கி. மனோகரன்

இசைமுரசு ஹனிபா இசைவிருந்து அளிப்பார்

இரண்டு நாட்களிலும் எஸ். எஸ். இராஜேந்திரன் குழுவினர் நடிக்கும்

அம்மையப்பன் — சந்திரமோகன்

நாடகங்கள் நடைபெறும்

பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணாவும், கழக முன்னணிச் சொற்பொழிவாளர்களும் கலந்துகொள்வர்.

வரவேற்புக்குழுவினர்.

கருத்துக் கதிர்

அம்மையைப் போக்க அற்புத பூஜை!

ஜோத்பூரில் அம்மை நோயைத் தடுக்க அரும் 'மருந்து' ஒன்று கண்டுபிடித்திருக்கிறார்களாம்! உலகிலுள்ள எந்த நாட்டு அறிவியல் அறிஞனும் இதுவரையில் கண்டுபிடிக்காத முறையை ஜோத்பூர் பெண்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்! அம்மை நோயைப் போக்கும் அந்த முறையை இந்திய அரசாங்கம், அகில உலகத்திற்கு ஒலிபரப்பினால்கூட, உலகிற்குப் பயன்படும். இந்தியாவின் பெருமையையும், புகழையும், அறிவுத் திறத்தையும் உலகோர் அறிந்துகொள்ள இதன் மூலம் நல்ல வாய்ப்பு ஏற்படுமல்லவா ?

அந்த மருத்துவ முறையை அறிந்துகொள்ள யாவர்க்கும் ஆவலாகத்தானே இருக்கும் ? மேலும் பொருட்செலவு இல்லாமல் கையாளப்படும் மருத்துவமுறை என்றால், கேட்கவா வேண்டும்! பெண்கள் நிர்வாணக் கோலமாய், நள்ளிரவில், மயானத்தை நோக்கிச் சென்று, அங்கு யமனுக்கு பூஜை போடுவதுதான் ஜோத்பூர் பெண்கள் கண்டறிந்த சீரிய மருத்துவ முறை!

ஜோத்பூர் நகரிலிருந்து சுமார் 3 மைல் தொலைவிலுள்ள மயானத்திற்குச் சுமார் ஐம்பது பெண்கள், நிர்வாணமாக, நள்ளிரவில் வாட்களையும், தடிகளையும், உலக்கைகளையும் ஏந்திக்கொண்டு சென்றார்களாம். இம்மாதிரி அடிக்கடி நடைபெறுகிறதாம். சுடுகாட்டில் நள்ளிரவில் யமதேவதை நடமாடும் என்றும், அரிசி, குங்குமம், சந்தனத்துடன் சென்று வழிபட்டால் கேடு வராமல் தடுக்கலாம் என்றும் அவர்கள் நம்பியுள்ளனர்.

இப்படிப்பட்ட "பெண்கள் கும்பமேளா"வை நடத்திக்காட்டும் வடநாட்டிலிருக்கும் பண்டித நேருதான் திராவிட இயக்கத்தாரைப் பார்த்து, அவர்கள் பைத்தியக்கார விடுதியில் வைக்கப்படாமல் ஏன் வெளியே இருக்கிறார்கள் என்று கேட்டார்.

இப்படிப்பட்ட பூஜைகளை நடத்த தென்னாடு சிறிதேனும் வெட்கப்படுகிறது என்றால், அதற்குக் காரணம் பகுத்தறிவு இயக்கத்தின் இடைவிடாத பிரச்சாரமாகும். இந்தப் பூஜையைக் கண்ணுறும் மேல்நாட்டார் கீழ்நாட்டாரின் அறிவு ஆற்றலைப் பற்றி என்ன மதிப்பிடுவார்கள் ? இப்படிப்பட்ட வெட்கக்கேடான செய்திகளைக் கண்ட பிறகேனும், நாட்டின் தலைவர்கள் பகுத்தறிவு இயக்கத்தின் அவசியத்தை உணர்வார்கள் என்று கருதுகிறோம். பகுத்தறிவுப் பிரச்சாரம் இல்லையாயின் விடுதலையும் கெடுதலையும் ஒன்றேயாகும் என்பது உறுதி.

ஃ ஃ ஃ

தனி நாடு கோரிக்கை

இந்தியாவோடு சேர்ந்து இருந்த பர்மா தனியாகப் பிரிந்துபோவதற்கான கிளர்ச்சி செய்து 1936-ம் ஆண்டு தனி நாடாகப் பிரிந்தது. பர்மாவின் வடக்குப் பகுதியிலுள்ள கரேனியர்கள் தாங்கள் வாழும் பகுதியைத் தனிநாடாக ஆக்கவேண்டும் என்று கிளர்ச்சிகளும் போராட்டங்களும் நடத்திப், பெரும்பகுதி உரிமைகொண்ட கரேன் அரசு ஒன்றினை உருவாக்கியிருக்கிறார்கள். இப்பொழுது வடமேற்கு அரக்கானிலுள்ள மக்கள் சுய ஆட்சியுள்ள தனி அரசு ஒன்றை அமைக்கத் திட்டம் போட்டுக் கொண்டிருக்கின்றனர். இக்கோரிக்கை விரைவில் வற்புறுத்தப்படும் என்று தெரிகிறது. இவர்கள் வேண்டும் தனி நாடு 4000 சதுரமைல் பரப்புகொண்டதுதான். பர்மா, அதிலிருந்து பிரியும் கரேன், அரக்கான் போன்ற நாடுகள் தனி நாடுகளாக வாழமுடியும் என்ற உணர்வோடும், ஊக்கத்தோடும் இருந்து வருகின்றன என்றால், ஏன் ஏழேமுக்கால்கோடி மக்களைக் கொண்ட திராவிடம் தனி நாடாக வாழமுடியாது என்பதை இந்திய அரசியல் தலைவர்கள் உணரவேண்டும். உணர்வார்களா? கரேன் பிரிவதும், அரக்கான் பிரிவதும் அண்மையிலுள்ள சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்!

ஃ ஃ ஃ

புண்ணை மூடிவிட்டால் போதுமா ?

புதுடில்லியில், தெருவின் ஓரத்தில் உரித்துப் போடப்பட்டிருந்த முலாம்பழத் தோலை, நிர்வாணமாக இருந்த ஒரு பிச்சைக்காரன் நக்கிக் கொண்டிருந்ததை, இரண்டு அயல்நாட்டுக்

காரர்கள் புகைப்படம் பிடித்தனராம். இதனை வழிப்போக்கர் சிலர் கண்டு, இந்தியாவின் மானம் படம் மூலம் பறிபோவதை எண்ணி வெட்கமும் துக்கமும் கொண்டு, அந்த அயல் நாட்டாரை அணுகி அந்தப் படத்தைத் தங்களிடம் தந்துவிடுமாறு வற்புறுத்தினராம். அங்கு ஒரு பரபரப்பு ஏற்பட்டுக் கூட்டம் பெருகிவிட்டதாம். இந்தியாவின் பல்வேறு பழக்க வழக்கத்தை சேகரிக்கவே அப்படிப்பட்ட படம் எடுப்பதாகவும், இந்தியாவின் மதிப்பைக் குறைக்கவேண்டும் என்பது தங்கள் எண்ணமில்லை என்றும் அவ்வயலார் தெரிவித்தனராம். கூடிக்கொண்ட மக்கள் மிகவும் வற்புறுத்தவே அவர்கள் பிலிம்மைக் கொடுத்துவிட்டார்களாம். உடனே அந்தப் பிலிம்மை நெருப்பிலிட்டு அழித்துவிட்டார்களாம்.

அயல் நாட்டார் படம் எடுக்கிறார்களே என்னும்போது ஏற்படும் வெட்கமும் துக்கமும், அப்படிப்பட்ட காட்சி இங்கே நிரந்தரமாக நின்று நிலவுகிறதே என்னும்போது ஏனோ இந்நாட்டவர்க்கு ஏற்படவில்லை! கண்டுபிடிக்கப்பட்டுக் கொளுத்தப்படாத படங்கள் எத்தனை இலட்சமோ, இங்கிருந்து பிற நாடுகளுக்குப் போய்க்கொண்டேயிருக்கின்றன என்பதை இங்குள்ளோர் உணரவேண்டும். முன்பு ஒரு முறை மிஸ் மேயோவும் இப்படித்தான் இந்தியாவின் ஆபாசங்களையெல்லாம் அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்து, அங்கு வேடிக்கை காட்டிச் சிரித்தாள். அப்பொழுதும் இந்தியாவில் பலர்க்குச் சினம் பொங்கிற்று; ஆனால் நிலைமையைச் சீர்படுத்தும் மனம் பிறக்கவில்லை. அயல் நாட்டார் இங்குள்ள ஆபாசத்தைப் படம் பிடிக்கிறார்களே என்பது கண்டு ஆத்திரப்படுவதைவிட, இங்குள்ள சீர்கேடான நிலைமைகளைப் போக்கச் சிந்தனையைச் செலவிட்டு செயல் முறைக்குக் கொண்டுவருவதுதான் உண்மையான மதிப்பையும், புகழையும் இந்தியத் துணைக்கண்டத்திற்குச் சேர்த்துதரும் என்பதை ஆத்திரக்காரர்கள் உணரவேண்டும். புண்ணை மூடிவிட்டால் போதுமா? புண்ணை மூடுவதைவிட, அதனைப் போக்கும் சிந்தனையிலல்லவா ஈடுபடவேண்டும்!

ஃ ஃ ஃ

வசதியெல்லாம் வடக்குக்கே

இந்திய அரசியலார், வடநாட்டு அகதிகளுக்கு வீடுகள் கட்டித் தரும் வகையில் மட்டும், ரூ. 60 கோடி, இவ்வாண்டு மார்ச்சுத் திங்கள் வரையில் செலவிட்டிருக்கிறார்கள். இதில் திராவிடம் தரும் வரிப்பணமும் கலந்திருக்கிறது. திராவிடத்தில் இலட்சக்கணக்கான நெசவாளர்களும், உழவர்களும், பிறரும் ஆதரவற்ற அகதிகளாய் மாறி, வீடின்றி பிச்சைக்காரர்களாய்த் தெருவில் சுற்றித் திரியும் நிலையில் இருக்க, இவர்களுக்கு வாழ்வளிக்க ஏதொன்றும் செய்யாத இந்திய அரசாங்கம், வடநாட்டு அகதிகளுக்கு ரூ. 60 கோடியில் வீடுகள் கட்டித் தந்திருக்கின்றது. வடநாட்டோடு திராவிடம் இணைந்திருப்பதால் இலாபமா, நஷ்டமா என்று பார்க்கும்போது, நஷ்டம்தான் என்று நாம் தரும் புள்ளி விபரம் இவ்வகையிலும் ஒத்துவருவதைக் காணலாம்.

மேலும் 'சட்லஜ்' நதியிலிருந்து 108 மைல் நீளமுள்ள பக்ரா கால்வாய் ஒன்று வெட்டப்பட்டு அதனை அண்மையில்தான் பஞ்சாப் முதலமைச்சர் பீம்சென் சர்ச்சார் திறந்து வைத்தார். இதற்காக இந்திய அசாங்கம் செலவழித்த பணம் பலகோடி ரூபாய். இதனால் எதிர்பார்க்கப்படும் வருமானம் ரூ. 100 கோடி. இதுவரையில் அமைக்கப்பட்ட கால்வாய்களில் பக்ரா கால்வாய்தான் நீளமானது.

இப்படி வாழ்வளிக்கும் பல திட்டங்கள் வடக்கேதான் நிறைவேற்றப்படுகின்றன. இந்திய அரசாங்கம் வசதிகளையெல்லாம் வடக்குக்கே ஆக்கும் என்பதற்கு இவை சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

ஃ ஃ ஃ

அமைதி ஏற்பட அட்லியின் கூற்று

"உலகம் முழுவதும் கம்யூனிஸ்ட்டுக் கொள்கையை அமுல் நடத்துவது, தன் பணி என்ற தீவிர நம்பிக்கையை ரஷ்யா கைவிடவேண்டியது உலக அமைதி ஏற்பட அவசியமான அம்சங்களில் ஒன்றாகும்" என்று பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் அட்லி கூறியுள்ளார். அவர் மேலும் குறிப்பிடும்போது, "பிரதேச ஆதிபத்தியம் காணும் பழைய ஏகாதிபத்தியத்துக்கு மாறாக உலகெங்குமுள்ள ஆண் பெண்களின் மனங்களில் ஆதிபத்தியம் வகிக்க விரும்பும் ஏகாதிபத்தியமாக ரஷ்யக் கம்யூனிஸம் இருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார். அட்

லியின் கூற்று பொதுப்படையாக நோக்கும் போது உண்மைக்குப் புறம்பானதல்ல என்பது தெளிவுபடும். அமெரிக்கா ஒருவகையான ஆதிபத்தியத்தை நிலைநாட்ட ஆசைப்படுகிறது; அதுபோலவே ரஷ்யா வேறொரு விதமான ஆதிபத்தியத்தை நிலைநாட்ட விரும்புகிறது. இந்த இரு நாடுகளின் போட்டியுணர்வு உலக அமைதியைக் கெடுக்கும் என்ற அச்சம் உலகில் எப்பொழுதும் இருந்து வருகிறது. இரு நாடுகளும் தங்கள் தங்கள் ஆதிபத்திய வேட்கையை விட்டொழித்தால்தான், உலக அமைதி நிலவ முடியும். இல்லையேல் உலக அமைதி முயற்கொம்பாகவே முடியும்! உலக அமைதி கெட இருநாடுகளும் முக்கிய காரணமாக இருக்கின்றன என்பதை இரு நாடுகளும் உணர்ந்து, அதற்கான வகையில் விட்டுக்கொடுத்துப் பணியாற்ற முனைய வேண்டும்.

ஃ ஃ

ஏழுமலையானுக்கு ஆஸ்தியா?

ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன் திருப்பதிப் பெருமானுக்கு ஒரு வைரமுடி—பத்து லட்சம் ரூபாய் செலவில் செய்யப்பட்டு, அணியப்பட்டது. இப்பொழுது ஒரு கையில் அணியும் ஹஸ்தம், 2½ லட்சம் ரூபாய் செலவில் செய்யப்பட்டிருக்கிறது. அந்த அணியில் 2144 வைரங்கள், 97 மரகதக் கற்கள், 212 இரத்தினங்கள், 490 தோலா எடையுள்ள தங்கம் எல்லாம் பதிக்கப்பட்டுள்ளனவாம்.

லட்சக்கணக்கான மக்கள் பகல் பட்டினி, இராப் பட்டினியாய், பஞ்சத்திலும், வறுமையிலும் வாடிடும்பொழுது, திருமலைக்கு அனுப்பப்படும் காணிக்கைகளுக்கு—வைர முடிகளுக்கு, இரத்தின ஹஸ்தங்களுக்குக் குறைவில்லாமலிருக்கிறது. அவற்றுக்குச் செலவிடப்படும் லட்சக்கணக்கான பணம், உண்மையிலே, பாரிகளைக் காக்க, ஏழைகளை உய்விக்க, சிறுவர்களுக்கு அறிவுதர, பிணியாளர்க்கு மருந்துதர, இன்ன பிற நல்ல காரியங்களுக்கு பயன்படுத்தினால் நாட்டுக்கு நல்லதல்லவா? பாட்டாளிக்குத் தரப்படுகிற ஒரு முழத்துண்டு, ஆண்டவன் தனக்குப் போர்த்தப்படுகிற பொன்னாடையாக ஏற்றுக்கொள்ளமாட்டாரா? ஏழைக்குத் தரப்படுகிற ஒரு கவளச் சோறு, ஈசன் சந்நிதியில் படைக்கப்படுகிற பெரிய ஆராதனையைவிட மேலானதல்லவா? பாரியின் வயிறு குளிர்ந்தால், ஆண்டவனின் அகம் மகிழாதா? ஏழைகளின் முகத்தில் மகிழ்ச்சி மலர்ந்தால், அதுவே ஆண்டவனுக்குச் செலுத்தக்கூடிய நல்ல காணிக்கையல்லவா?

அஞ்சலி

குமரவேல் மறைவு

கல்லக்குடி போராட்டத்திலே ஈடுபட்டு, அடக்குமுறைக்கு ஆளாகிச், சிறைத்தண்டனை பெற்று மீண்ட மணப்பாறைத் தோழர் குமரவேலு இயற்கை எய்தினர் என்ற செய்தி நம்மைத் துக்கத்திலும் துயரத்திலும் ஆழ்த்துகிறது.

நாட்டுக்கு இழைக்கப்படும் கேடுகளை நீக்க, தாயகத்தின் மானத்தைக் காக்கக் களம் புகுந்திட்ட வீரர்களில் குமரவேலுவும் ஒருவர். கட்டுடல் காளைப்பருவம், கலங்காது செயலாற்றும் எஃகுள்ளம்; வடநாட்டு அடிமைச் சின்னத்தை மாற்றியமைத்திட எழுந்த அறப்போரில், தோழர் குமரவேலு முன்னணி வீரர்களில் ஒருவராய் நின்று சிறைக்கோட்டம் புக்கார். சிறையின் கொடுமையான நிலை, அவரது உள்ள உறுதியை சிதைக்கவில்லையேனும்; உடலுறுதியைச் சிதைத்துவிட்டது. கட்டுடலினராய் உள் சென்ற குமரவேல், குற்றுயிருடன் வெளிவந்தார். நோய் தீர்க்கத் தோழர்கள் பாடுபட்டனர், உதவிகள் வழங்கப்பட்டன. எனினும் முற்றிய நோய் தணியவில்லை. உயிர் அகன்றது, உடல் இறந்தது. அகலாத வீரத்தைத் தந்துவிட்டு, இறவாத புகழைத் தங்கவிட்டு, குமரவேல் சென்றுவிட்டார்!

இறந்த மாவீரருக்கு நமது வணக்கத்தைச் செலுத்துகிறோம். அவரைப் பிரிந்து துன்பத்திலுழலும் அவரது குடும்பத்ினருக்கும், உற்றார் உறவினருக்கும் நண்பர்களுக்கும், நமது ஆழ்ந்த பரிவு உரித்தாகுக!

அட்டைப்பட விளக்கம் :

தீ மூண்டது

16 வது நூற்றாண்டின் ஆரம்பத்தில்தான் ஐரோப்பிய கண்டத்தில், 'மத அரசுக்கு' இருந்த ஆதிக்கம் சீர்குலையத் தொடங்கியது. அதுவரை, போப்பாண்டவர்தான் இகலோகம் பரலோகம் இரண்டிற்கும் ஏகச் சக்ரவர்த்தியாக யிருந்தார். மண்டலங்களை ஆக்கவும், அழிக்கவும், அரசுகளைக் காக்கவும், நீக்கவுமான வலிமை வட்டிகன் நகரத்து பாதிரியிடமிருந்தது. அவர் விரலசைத்தால், பிரான்ஸ் இங்கிலாந்து மீது போர் தொடுக்கும், ஆஸ்திரியா பிரஷியா மீது பாயும். மதத் தலைவர், மன்னர்களின் தலைவராக, மண்ணையும் விண்ணையும் காத்திடும் தலைவராக ஆட்சிபுரிந்தார்.

மதத்தலைவர்களுக்கு ஆதிக்கமிருந்த காரணத்தால், கோயில்களுக்கு சொத்தும், வருமானமும் ஏராளமாக இருந்தன. காணிக்கைகள் குவிந்தன, வரிகள் வசூலிக்கப்பட்டு, வட்டிகன் வேந்தருக்கு அனுப்பப்பட்டது. ஒரு கிருஸ்தவ படத்தில் வேலை பார்ப்பது, ஒரு மாதாகோயில் பாதிரியாக இருப்பது, மிகவும் லாபகரமான தொழிலாக, மதிப்புடைய பதவியாக இருந்தது.

பக்தி குறைந்தது, ஆனால் பாதிரிமார்கள் தொகை வளர்ந்துகொண்டே போனது. மண்டியிடுவோர் எண்ணிக்கை அதிகமானது, ஆனால் செய்யப்படும் பாபங்களோ மன்னிக்க முடியாத அளவு வளர்ந்துகொண்டிருந்தது. பிரார்த்தனையின் சத்தம் உயர்ந்தது, ஒழுக்கம் உயரவில்லை. காணிக்கை குவிந்தது, மக்களின் நிலை தாழ்ந்துகொண்டே போனது.

பஞ்சத்தாலும், பட்டினியாலும் துடிக்கையில், கோயிலில் வருகிற வருமானத்துக்கும், போப்பாண்டவருக்கு அனுப்பப்படுகிற காணிக்கையின் அளவுக்கும், அதனால் அங்கு நடக்கிற கோலாகல வாழ்வுக்கும் ஏதும் குறையில்லாமலிருந்தது. எவ்வளவுதான் வருமானம் கிடைத்தாலும், போப்பாண்டவரின் சந்நிதியில் போதவில்லை யென்ற குறைதான் இருந்தது. பணத்தை வசூல் செய்ய, 16-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பட்டமேறிய போப்பாண்டவர், "பாவமன்னிப்புச் சீட்டு" என்பதை விற்கத் தலைப்பட்டார்.

"பாவமன்னிப்புச் சீட்டுகள் வாங்குங்கள், பாவக் கறைகள் நீங்கும்! அருள் சீட்டுகளைப் பெறுங்கள், ஆண்டவனின் அருள் கிட்டும்!" என்றெல்லாம் மதத் தூதர்கள் பிரசாரம் செய்து, பாவமன்னிப்புச் சீட்டுகளை விற்றுப் பொருள் சேர்த்து, போப்பாண்டவருக்கு அனுப்பிவைத்தனர்.

பாவமன்னிப்புச் சீட்டு விற்றுப் பொருள் திரட்டுவதை வெளிப்படையாக எதிர்த்தவர், மார்டின் லூதர் என்பவராவர். காணிக்கை கொடுத்துவிட்டால், பாவம் கரைந்துவிடும் என்பது மோசடி, என்று முழங்கினார். அவரும் ஒரு பாதிரிதான். இருந்தாலும் மதத்தின் பேரால் செய்யப்படும் மோசடிகளைக் கண்டித்தார் பாவ மன்னிப்புச் சீட்டு கூடாது என்பதற்கு 96 காரணங்கள் காட்டி ஒரு அறிக்கை, விட்டன்பர்க் மாதாகோவில் கதவில் லூதர் ஒட்டினார்.

லூதரின் அறிக்கையும், எதிர்ப்பும் காட்டுத் தீ போல் பரவியது. செய்வதறியாது திகைத்திருந்த மக்களெல்லாம் மார்டின் லூதர் செய்வதை ஆதரித்தனர். பாவமன்னிப்புச் சீட்டுக்கு எதிர்ப்பு—போப்பாண்டவரின் ஆதிக்கத்துக்கு எதிர்ப்பு உண்டாகியது.

லூதரின் செய்கையைக் கண்டித்து, எதிர்ப்பைக் கைவிட்டு அறுபது நாட்களுக்குள் மன்னிப்புக் கோரவேண்டுமென்று போப்பாண்டவரிடமிருந்து ஒரு உத்தரவு லூதருக்கு வந்தது.

அந்த கடும் உத்தரவுக்கு மார்டின் லூதர் என்ன பதில் தந்தார்? அதுதான் அட்டைப்படத்தில் காட்டப்பட்டிருக்கிறது. ஒரு தீயை மூட்டி, அதில் பாவமன்னிப்புச் சீட்டு, போப்பாண்டவரின் உத்தரவு எல்லாவற்றையும் போட்டு எரித்தார். உத்தரவு கருகியது, போப்பாண்டவரின் அதிக்கமும் கருகியது!

வெளிவந்துவிட்டது !

அறிஞர் அண்ணா தீட்டியது

ராஜபார்ட்

ரங்கதுரை பாகவதர்

விலை அணா எட்டு

மறுமலர்ச்சி நூல்நிலையம்

8, குமரப்ப முதலித் தெரு, சென்னை-1.

S. P. T.

சங்கரன்

முன்னேற்றத் தனிப் பயிற்சிக்கூடம்

Sankaran Progressive Tutorials

கருணாநிதி பார்க், தெப்பக்குளம் P. O., திருச்சி.

உயர்நிலைப்பள்ளி, கல்லூரி, எஞ்சினீயரிங்

பரீட்சைகளுக்கு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்

ஆரம்பம் 9 - 6 - 54

மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி அளிப்பதில் திறமையும் அனுபவமும் மிக்க பேராசிரியர்கள் உள்ளனர்

பேராசிரியர்கள் :

Mr. N. J. தேவதாஸ், M. A.
Mrs. ஜூடித் லூயிஸ், B. A. (Hons)
Mr. I. திவ்வியநாதன் B. A. (Hons)
,, வெங்கட்ராமன், M. A., L. T.
,, N. பிச்சை B. A. (Hons.)
,, M. வெங்கட்ராமன். M. A , B. Com.
,, N. S. கிருஷ்ணசாமி M. A.
,, V. துரைராஜ், B. Sc., B. T.
,, R ஜான்சன், B. A. B. T. (Dip. in Geo.)
,, G. ரத்தினம், B. Sc.

Mr. A. பாலசுப்பிரமணியன், B. Sc.
,, D. A. சாமி(விஷாரத்)வித்வான் சோழகர்
,, K. ஜான் B. A.
,, லூயிஸ் பீட்டர், B. A.
,, R சுப்ரமணியம், B. A.
,, C. சாமி, B. A.

எஞ்சினீயரிங்

Mr. M. பாலகிருஷ்ணன். B. E.
,, M. K. நடராஜன். B. E.
,, P. சங்கரன், B. E.

வைஸ்-பிரின்சிபால் : **MRS. ஜூடித் லூயிஸ்**, B. A. (Hons.)
(கோவை அரசினர் கல்லூரி முன்னாள் ஆங்கிலப் பேராசிரியர்)

பிரின்சிபால் : **MR. N. J. தேவதாஸ்**, M. A.
(திருச்சி நகரில் தனிப் பயிற்சிக்கூடங்களை நிறுவியவர்களில் முதன்மையானவர்)

ஆபீஸ் :
16, நந்திகோயில் தெரு,
தெப்பக்குளம் P. O. திருச்சி.

I. திவ்வியநாதன், B. A. (Hons.)
செயலாளர்.

விபரங்களுக்கு நாலணா ஸ்டாம்புடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதவும்.

செயலாளர்,
சங்கரன் முன்னேற்றத் தனிப்பயிற்சிக்கூடம்,
தெப்பக்குளம் P. O., திருச்சி.

நினைப்பும் நிலையும்

இரா. நெடுஞ்செழியன்.

"குன்றக்குடியாருக்குக் காணிக்கை!" என்று யாம் எழுதிய கட்டுரையைப் படித்துவிட்டு, ஆத்திரங்கொண்ட அடிகளாரின் அடியவர் ஒருவர், "நெடுஞ்செழியனார் நினைவிற்கு!" என்று ஒரு மாற்றுக் கட்டுரை வரைந்துள்ளார். அவர் அடிகளாரின் நெருங்கிய'பக்தர்'போலும்! எனவேதான் அடிகளாருக்கு 'வக்காலத்து' வாங்கிக்கொண்டு சிலபல வரைய முன்வந்துள்ளார். அப்படியாவது ஒருவர் முன் வந்தது கண்டு மகிழ்கிறோம்; வரவேற்கிறோம்!

"விருப்பு வெறுப்பற்ற முறையிலே அனைத்தையும் ஆராய்ந்து பார்க்கும்படி தொன்றுதொட்டு வளர்ந்து வருகின்ற தமிழகத்தின் தோழமை உணர்ச்சியால் 'மன்றத்திற்கு' நினைவூட்டுகிறோம்" என்று அந்த அடியவர் கூறுகிறார், என்னவோ அந்தப் பண்பு அவரிடமும், அடிகளாரிடமும் நிரம்பப் பொதிந்து கிடப்பது போல எண்ணிக்கொண்டு. "மன்றம்" விருப்பு வெறுப்பற்ற முறையில் ஆராய்ந்த காரணத்தால்தான், அடிகளாரிடம் மகிழ்ச்சிக்கான காரணங்களையும் கண்டது; மாறுபாடு கொள்வதற்கான காரணங்களையும் கண்டது. விருப்பு வெறுப்பற்று நோக்கும் பண்பு அடிகளாரைவிட, அவரது அடியவரைவிட 'மன்றத்'திடத்தே மிக உண்டு என்பதை அந்த அடியவருக்குக் கூறிக்கொள்கிறோம்.

குன்றக்குடியாரின் 'சமயமறுமலர்ச்சி' என்ற கட்டுரையில் தெளிவு நிரம்ப இருப்பதாக நினைத்துக் கொண்டு, அதனைத் திரும்பத் திரும்ப நமக்குச் சுட்டிக்காட்டுகிறார் அடியவர். நாமும் திரும்பத்திரும்ப நினைவு படுத்திப்பார்த்தோம்; அதில் முதலும் - நடுவும் - முடிவுமாக உள்ள மலர்ச்சி-தளர்ச்சி-மறுமலர்ச்சி பற்றிக் கூறப்பட்டுள்ள கருத்துக்களில் பல, அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்த மற்றவையாக இருப்பதையே காண்கிறோம். அவற்றில் ஓரிரண்டு கருத்துக்களை மட்டும் எடுத்துக்கொண்டு அவை எப்படிப் பொருத்த மற்றவையாக விளங்குகின்றன என்பதைத்தான் 'குன்றக்குடியாருக்குக் காணிக்கை' என்ற தலைப்பில் விளக்கிக் காட்டினோம். தேவைப்பட்டால், நேரமும் எடும் இடங்கொடுக்குமேயானால், ஏனையவற்றிற்குங் கூட விளக்கங் கொடுக்க பிற்பாடு முயலலாம்.

பண்டைத் தமிழ்ப் பெருமக்கள் ஆலயங்கள் எடுத்து வழிபட்ட காரணத்தாலேயே சிறந்திருந்தனர் என்ற கருத்தையும், அகத்தின் நல்லுணர்ச்சியைக் காத்துப் பெருக்கிக்கொள்ள ஆலயவழிபாடே முக்கிய காரணமாக விளங்கிற்று என்ற கருத்தையும், அவர்கள் சிந்தனையைத் திருத்திச் சிவத்தில் ஆழ்த்தினதினாலேயே சிறந்திருந்தனர் என்ற கருத்தையும் ஆராய்ந்து பார்க்கிறோம்; அவை விவாதித்து மறுத்தற்குரியன என்றே தெளிவு பெறுகிறோம். பண்டைத் தமிழ்மக்களின் சிறப்புக்கு, அவர்களிடையே இயல்பாக வழிவழி முறையாக வளர்ந்து வந்த அறிவு, ஆற்றல், அன்பு, அருள், ஈவு, இரக்கம் பண்பு, ஒழுக்கம், அறம், நீதி, நேர்மை ஆகியவைகள் முக்கிய காரணமாக அமைந்திருந்தனவே யொழிய, ஆலயவழிபாட்டில் ஈடுபட்டிருந்த தன்மையும், சிவத்துவத்தில் ஆழ்ந்த தன்மையும் மட்டுமேயல்ல. ஆலயவழிபாட்டிலும், சிவத்திலும் நம்பிக்கையற்றவர்கள் கூட மேற்கண்ட தன்மைகளைக் கொண்டிருந்திருக்கின்றனர். சிவத்துவத்தில் ஆழாத சமண-புத்தக் கொள்கையுடையாரும் சிறந்து விளங்கியே வந்திருக்கின்றனர். பண்டைத் தமிழகத்தின் மலர்ச்சி, சமயத்தின் மலர்ச்சி அல்ல என்பதைப் பன்முறையும் வற்புறுத்திக்கூற விரும்புகிறோம் அடிகளாரின் அடியவருக்கு. பொதுவழிபாட்டு இயக்கங்களும், பொ ப் பிரார்த்தனைகளும் கொண்ட சமயவாழ்வு அவசியமற்றது; அப்படிப்பட்ட சமயச் சார்பற்ற வாழ்க்கை சாரமற்ற வாழ்க்கை என்று சொல்லி விடமுடியாது; அது சாரமுள்ளதாகக் காட்சியளிக்கவும் செய்கிறது என்ற கருத்தைக் குன்றக்குடியாரின் அடியவருக்கு வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறோம். எதைச் 'சாரம்'என்று கூறுகிறோ

அந்த அடியவர், அந்தச் 'சாரம்', சமயச்சார்பற்ற பிறரிடமும் காட்ட இயலும்.

நாம் வழுக்கி வீழ்ந்த மடாதிபதிகளின் 'வம்பளப்புப் பட்டியல்' தருவதாக அந்த அடியவர் ஆத்திரப்படுகிறார்! அவர் நிலைகண்டு இரங்குகிறோம்! 'வம்பும்', 'அளப்பும்' புராணம் போற்றும் அடிகளாருக்கும், அவர்தம் அடியவருக்கும் தனியுரிமைச் சொத்துக்களாக இருக்க, அவை எமக்கு எப்படி ஏற்பனவாகும்? காரணகாரியவிளக்க மில்லாமல் எதனையும் நம்பச் சொல்லும் அடியவருக்கு அல்லவா அவை சொந்தமாகும்! யாம் கூறும் பட்டியலில் 'வம்பும்' இல்லை, 'அளப்பும்' இல்லை அடியவரே! வழுக்கி வீழ்ந்த மடாதிபதிகளின் பட்டியில் எவரையும் விதிவிலக்கு என்று ஒதுக்கிவிட முடியாதே! அடியவருக்குத் தேவையானால், குன்றக்குடி மக்களிலேயே சாட்சிகள் கொண்டுவந்து நிறுத்த இயலும்; ஏன் குன்றக்குடியாரின் மனச்சான்றேகூட சாட்சியம் சொல்லும்! ஆற்றலும் துணிவும் அடியவருக்கு உண்டென்றால், கேட்கட்டும், சாட்சியங்கள் தருகிறோம்! நாம் கொடுத்துள்ள சீர்கெட்ட சமயச் சார்புடையோரின் பட்டியல் அடியவருக்கு வசை புராணப் பட்டியலாகப்படுகிறது. 'வசை' பாடுதலும், 'புராணம்' புனைதலும் அடிகளாரின் அடியவரின் பரம்பரைக்குச் சொந்த உரிமைகளாயிற்றே! யாம் பட்டியலில் சுட்டிக் காட்டியுள்ள எந்தக் குறிப்பை அந்த அடியவர் மறுக்கிறார் என்று கேட்கிறோம்? எந்த ஒரு குறிப்பையும் மறுக்க அந்த அடியவருக்கு அறிவு, ஆற்றல், வக்கு, வழி, வகை உண்டா என்று அறைகூவிக்கேட்கிறோம்? 'வசை புராணப் பட்டியல்' என்று கூறிவிட்டால், அதுவே சமாதானமாகிவிட முடியுமா? நேருக்குநேர் காரண காரிய விளக்கங்காட்டி மறுக்கத் துணிவும் திறனும் வேண்டாமா? அந்தத் துணிவும், திறனும் உண்டா? மறுத்துக் கூறும் வகையில்லாவிட்டால் அந்த அடியவர் வாயடக்கி, வாளா இருப்பது தானே நலம்!

நாம் இன்னமும் பன்முறை வற்புறுத்திச் சொல்கிறோம், ஒருவன் அன்பு, அறம், அருள், ஒழுக்கம், அறிவு, ஆற்றல், நீதி, நேர்மை ஆகியவற்றை உடையவனாக இருக்க, குன்றக்குடியார் போற்றும் திருக்கோயில் வழிபாடு அவசியமில்லை-திரு நீற்றுப்பூச்சு அவசியமில்லை-காவி உடை அவசியமில்லை—தாடிவளர்த்தல் அவசியமில்லை—தேர்திருவிழா அவசியமில்லை—கூட்டு வழிபாடு அவசியமில்லை—சிவன், அவர் மனைவி பார்வதி, அவர்கள் பிள்ளை விநாயகர், அவர் தம்பி சுப்பிரமணியர், அவர் மனைவிமார்கள் வள்ளி தெய்வயானை, விஷ்ணு, பிர்மாபோன்ற 'கடவுளர்'களின் விக்ரகங்களை வணங்கவேண்டிய அவசியமில்லை—அவை பற்றிய புராணக்கதைகளை நம்பவேண்டிய அவசியமில்லை; அந்தப் பண்புகளிடத்தே உண்மையானபற்று இருந்தால் போதும் என்று. இதனை மறுத்துக்கூற அவருக்குத் துணிவு உண்டா? நேருக்கு நேர் வாதிட்டு வேண்டுமானாலும் பார்க்கலாம்!

நமக்கு நினைவுபடுத்தவந்த அடியவர் "திருந்திய சிந்தையில் உலக நலங்கருதி உருவெடுக்கும் உயர்வான கொள்கைகளே சமயம் எனப்படுவது" என்று புதுமுறை விளக்கம் ஒன்று தருகிறார். 'சமயம்' என்பதற்கு இதுதான் உண்மையான விளக்கமா? சமயம்-மதம்-Religion என்றால் அகராதிகளும், இதுவரை உரையியற்றியவர்களும் இந்த விளக்கத்தைத் தரவில்லையே? சமயம் என்றால், 'ஆண்டவனை' வழிபடும் பொருளாகக் கொண்டு, ஆண்டவன்-உலகம்-ஆத்மா பற்றியும் அவற்றின் ஒன்றுக்கொன்றுள்ள தொடர்புபற்றியும் கூறும் வேதம்-ஆகமம்-புராணம்-இதிகாசம்-அனுஷ்டானம்-சாஸ்திரம்-சம்பிரதாயம் ஆகியவற்றைப் போற்றிக் கடைப்பிடிக்கும் சமூக அமைப்பு என்று தானே அகராதிகளெல்லாம் விளக்கந் தருகின்றன! அப்படியிருக்க அடியவர் புதிய விளக்கம் தர முற்படுவானேன்? பகுத்தறிவு இயக்கத்தின் கணைகள் தம்மீது பாயாமல் தப்புவதற்காக அடியவர் புதிய உருமாற்றம் கொள்கிறார் போலும்!

"திருந்திய சிந்தையில் உலக நலங்கருதி உருவெடுக்கும் உயர்வான கொள்கைகளே சமயம் என்படுவது" என்றால், சைவம்—வைணவம்—புத்தம்—சமணம் — இஸ்லாம்—கிருத்தவம்—பார்சி—சீக்கியம் போன்ற இவைகளில் எது திருந்திய சிந்தையில், உலகநலங் கருதி உருவெடுத்து, உயர்வான கொள்கைகளையுடைய சமயம்? இவைகளில் ஏதேனும் ஒன்று அல்லது எல்லாமுமா? ஏதேனும் ஒன்று என்றால் அது எது? எல்லாமும் என்றால், ஒன்றுக்கொன்று கொள்கைகள் முரண்படுகின்றனவே, அதற்கு என்ன காரணம்? அடியவர் சொல்லும் சமாதானம் என்ன?

எது திருந்திய சிந்தை, எவை உலக நலங் கருதி உருவெடுக்கும் உயர்வான கொள்கைகள் என்பவைபற்றிய இசைவான—ஏற்ற விளக்கத் திற்குப்பின், அவ்விளக்க அடிப்படையில் காணப்படும் “திருந்திய சிந்தையில், உலக நலங்கருதி உருவெடுக்கும், உயர்வான கொள் கைகளே சமயம் எனப்படுமாயின்” அப்படிப் பட்ட சமயத்தை நாம் மறுக்கவில்லை. அப்படிப் பட்ட சமய வாழ்வை, ‘ஆண்டவனை’ நினைக்கா மல், அவனை வழிபடாமல், வேத—சாஸ்திர— —சம்பிரதாயச் சடங்குகளைச் செய்யாமல், குன்றக்குடியார் போன்று திருநீறு—காவி யுடை—உருத்திராக்கம் அணியாமல் பகுத்தறி வாளர்களும் நடத்தலாமே—நடைமுறையில் நடத்தித்தானே வருகிறார்கள். அப்படிப்பட்ட சமய வாழ்வை நாம் ஏற்கிறோம்; ஆனால் அச் சமயவாழ்வுக்கு அப்பாற்பட்ட சைவச் சமய வாழ்வை வெறுக்கிறோம். இதில் என்ன தவறு என்று அடியவரைக் கேட்கிறோம்?

“நல்லறிவின் துணையால் தன்னலங்கருதாது மன்னுயிரைப் பேணும் மரபே சமயநெறியா கும்” என்று புதிய விளக்கந்தருகிறார் அந்த அடியவர். எது நல்லறிவு எது தன்னலங்கரு தாத்தன்மை. எது மன்னுயிரைப் பேணும் முறை என்பதை பற்றி விளக்கம் பெற்று, அதன் அடிப்படையில் அமையும் நெறியே சமயநெறி யாயின், அந்த நெறியினை நாம் மறுக்கவில்லை. அப்படிப்பட்ட நெறியினர் ஆண்டவனை மறந்த பகுத்தறிவாளர்களிலும் பலர் இருக்கவே செய் கின்றனர். இத்தகைய சமயநெறி நின்ற ஞானச் செல்வர்களை நாம் ஞாபகப்படுத்திப் பார்க்கிறோம். அவர்கள் பகுத்தறிவியக்கத்தி லும் இருக்கக் காண்கிறோம்; சைவம்—வைண வம்—இஸ்லாம்—கிருத்தவம் — புத்தம்—சம ணம் ஆகிய மத அமைப்புகளிலேயும் இருக்கக் காண்கிறோம். அத்தகைய நெறிக்கும் மதங் களுக்கும் தொடர்பில்லை என்பதையும் காண் கிறோம்!

ஆனால் குன்றக்குடியார் போற்றிக்காப்பாற்றி வளர்த்து வரும் சைவசமயம், புதுவிளக்கங் கொண்ட சமயமாகாது; அவரது சைவ சமய நெறி புதுவிளக்கங்கொண்ட சமயநெறி ஆகாது என்று அடியவருக்குக் கூறிக்கொள்ளுகிறோம்.

குன்றக்குடியார் போற்றி வளர்த்துவரும் திருநீறு-உருத்திராக்கம் - காவியுடை - தாடி - கூட்டு வழிபாடு-பிரார்த்தனை - தேர் திருவிழா. வேதபுராண இதிகாச ஆகம நம்பிக்கை-சாஸ் திர சம்பிரதாயச் சடங்குகள் ஆகியவைகள் இல்லாமலேயே ஒருவன் எல்லாச் சிறந்த பண்பு களுக்கும் இருப்பிடமாய் இலங்கமுடியும், வாழ்வை இனிது நடத்திச் செல்ல முடியும் என்பதைக் குன்றக்குடியாருக்கும், அவர்தம் அடியவருக்கும் எங்கு, எப்பொழுது வேண்டு மானாலும் தெளிவுபடுத்திக் காட்ட ஆயத்த மாக இருக்கிறோம்!

எமது நினைப்பில் தவறு ஏதும் இல்லை; எமக்கு மாற்றுக் கட்டுரை தீட்டிய அடியவரின் நிலையிலும், அடிகளாரின் நிலையிலுந்தான் தவறு இருக்கிறது என்பதை அடிகளாரின் ‘பக்தரு’க்குத் தெரிவித்துக்கொள்ள விழை கிறோம்.

பிழைக்கும் வழி !

சீனாவில் குடியேறி வாழ்க்கை நடத்திவந்த ஆங்கிலேயர் ஒருவர், நீண்ட காலத்திற்குப் பிறகு தம் தாயகமாம் இங்கிலாந்துக்குச் செல்ல விரும்பினார். ஆனால் இங்கிலாந்துக்குப் போகப் போதுமான பணவசதி இல்லை. என்ன செய்வது என்று ஆழ்ந்து சிந்தித்தார். இறுதியில் ஒரு திட்டம் அவர் மனதிற்குப் பட்டது.

நல்ல சிவப்பு வண்ணம் கலந்த தண்ணீரை ஏராளமான புட்டிகளில் அடைத்தார். கருவுற்றிருப்பவர்களெல்லாம் தங்களுக்குப் பிறக்கப்போகும் குழந்தை ஆண் குழந்தையாக இருக்கவேண்டுமென்று விரும்புவார்களாயின், தாம் தயாரித்த ஒரு புட்டி மருந்தை வாங்கிச் சாப்பிட்டால் போதும் என்று விளம்பரப்படுத்தினார். தாம் சொல்லியபடி பிறக்கும் குழந்தை ஆண் குழந்தையாக இல்லாமற் போகுமேயானால், பணம் திருப்பிக் கொடுக்கப்படும் என்றும் கூறியிருந்தார்.

ஏராளமான புட்டிகள் விலை போயின. பிறந்த குழந்தைகளில் ஏறத்தாழ பாதி அளவு குழந் தைகள் பெண் குழந்தைகளாகப் பிறக்கவே, தாம் சம்பாதித்த பணத்தில் பாதிப் பணத்தைத் திருப்பிக்கொடுத்து நாணயத்தைக் காப்பாற்றிக்கொண்டார் அந்த ஆங்கிலேயர். ஆனால் பாதி அளவு குழந்தைகள் இயல்பாகவே, ஆண்குழந்தைகளாகப் பிறக்கவே, பாதிப் பணம் அவருக்கு மிச்சமாயிற்று. அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு இங்கிலாந்து போய்ச் சேர்ந்தார்.

மூட நம்பிக்கையின் விளைவு

[தமிழாக்கம் : இரா. நெடுஞ்செழியன்]

மூட நம்பிக்கை செய்யும் தீங்குதான் என்ன? கட்டுக்கதைகளையும் பழங்கதைகளையும் நம்புவதால் ஏற்படும் தீங்குதான் என்ன?

அடையாளங்களையும் அதிசயங்களையும், தாயத்துக்களையும் மந்திரங்களையும், விதியையும் அற்புதங்களையும், கடவுள்களையும், பூதங்களையும், மோட்சங்களையும் நரகங்களையும் நம்புவது, மனிதனின் மூளையைக் குழப்பிவிடுகிறது; உலகை ஒரு பைத்தியக்கார விடுதியாக மாற்றுகிறது; உள்ளத்திலிருக்கும் உறுதிப்பாடுகளையெல்லாம் அகற்றிவிடுகிறது; அனுபவத்தை ஒரு கட்டுப்படுத்தும் வலையாக ஆக்கிவிடுகிறது; காரண காரியத்திற்கிடையே உள்ள அன்புத் தொடர்பை அறுத்துவிடுகிறது; இயற்கையிலுள்ள ஒருமைப்பாட்டைக் குலைக்கிறது; மனிதனை ஒரு நடுக்கங்கொண்ட வேலைக்காரனாகவும், அடிமையாகவும் மாற்றுகிறது. இந்த நம்பிக்கையோடு இருந்தால், இயற்கை அறிவு, நாம் கடைபிடிக்கவேண்டிய வழியைத், தெளிவாகக் காட்டுவதில்லை! காணப்படாத ஆற்றல்களுக்கு முன்னால், இயற்கை ஒரு பொம்மையாகவே இருக்கிறது! இயற்கைக்கு மீறிய மந்திரக்கடவுள், தம்முடைய மந்திரக்கோலால், உண்மையைத் தொடுகிறார்; அந்த உண்மை மறைந்துவிடுகிறது! காரணங்களில்லாம் காரியங்கள் நிகழ்கின்றன; காரியங்கள் இயற்கைக் காரணங்கள் எல்லாவற்றினின்றும் தனித்து வாழ்கின்றன! ஏமாற்றம் அரசனாக வீற்றிருக்கிறது! அடிப்படை போய்விட்டது! கோபுரம் காற்றில் மிதக்கிறது! பண்புகளிடையிலோ அல்லது உறவுகளிடையிலோ அல்லது முடிவுகளிடையிலோ ஒரு ஒற்றுமை கிடையாது! பகுத்தறிவு நாடுகடக்கிறது; மூடநம்பிக்கை முடிசூட்டிக்கொள்கிறது!

இருதயம் இறுகுகிறது; மூளை பலவீனமாகிறது!

இயற்கையை மீறிய ஆற்றலின் பாதுகாப்பை அடையவேண்டும் என்ற முயற்சியில், மனிதனுடைய ஆற்றல்களெல்லாம் கொன்னே கழிக்கப்படுகின்றன. நாணயமான உழைப்பு—ஆராய்ச்சி—அறிவின் முயற்சி—நோக்கு—அனுபவம் ஆகியவற்றின் இடங்களைக், கொடுமை—சடங்கு—வழிபாடு— பலி — வழிபாட்டுமுறை ஆகியவைகள் நிரப்பிக்கொண்டிருக்கின்றன. முன்னேற்றம் என்பது முடியாத தொன்றாக ஆகிவிட்டது!

மூடநம்பிக்கை, விடுதலையுணர்ச்சியின் பகையாகவே எப்பொழுதும் இருந்துவருகிறது: எப்பொழுதும் இனியும் இருந்துவரும்.

மூடநம்பிக்கைதான், எல்லா கடவுள்களையும் தேவதைகளையும் உண்டாக்கிற்று; எல்லா பூதங்களையும் பேய்களையும் உண்டாக்கிற்று; எல்லாப் பிசாசுகளையும் மாந்திரீகர்களையும் உண்டாக்கிற்று; நமக்குக் குறி சொல்வோரையும், அவதார புருஷர்களையும், தேவதூதர்களையும் கொடுத்தது; வானவெளியில், மோட்ச உலகின் அறிகுறிகளையும் அதிசயங்களையும் நிறையச் செய்தது; காரண காரியத்திற்கிடையே இருந்த தொடர்புச் சங்கிலியை அறுத்தது; அற்புதங்களும் பொய்களும் நிறைந்ததான மனித வரலாற்றை எழுதிற்று! மூடநம்பிக்கை, பாதிரிமார்களையும் குருமார்களையும், போதகர்களையும் புரோகிதர்களையும், ஆண் துறவிகளையும் பெண் துறவிகளையும், பிச்சை எடுக்கும் மந்திரக்காரர்களையும் குற்றம்புரியும் மகான்களையும், மதவிளக்கங் கூறுவோரையும், மதவெறி கொண்டோரையும், ‘அப்படிப்பட்டவர்’களையும் ‘இப்படிப்பட்டவர்’களையும் ஏற்

படுத்திற்று! மூடநம்பிக்கை, மனிதர்களை, விலங்குகள் கற்கள் ஆகியவற்றின் முன்னால், மண்டியிட்டு விழும்படி செய்தது; பாம்புகளையும், மரங்களையும், காற்றில் வாழும் பைத்தியக்கார பிசாசுகளையும் வணங்கும்படி அவர்களைத் தூண்டியது; பொன்னும் உழைப்பும் வீணாகும்படி அவர்களுக்குத் தப்பு வழி கற்பித்தது; குழந்தைகளின் குருதியை அவர்கள் சொரியும்படிச் செய்தது; தீச்சுழலில் குழந்தைகளைத் தள்ளி அவர்கள் கொளுத்தும்படி செய்தது! மூடநம்பிக்கை, எல்லாவித மடாலயங்களையும் ஈசுவரன் கோயில்களையும் கட்டிற்று; எல்லா வகை மாதாகோயில்களையும் மசூதிகளையும் கட்டிற்று; உலகத்தில் தாயத்துக்களையும் மந்திரங்களையும் கொண்டுவந்து நிரப்பிற்று; கடவுள் பொம்மைகளையும் கடவுள் உருவச்சிலைகளையும் கொண்டுவந்து சேர்த்தது; புனித எலும்புகளையும் பரிசுத்த மயிர்களையும் கொண்டுவந்து காட்டிற்று; மதத்தியாகிகளின் குருதியையும் அவர்களின் கிழிந்த துணிகளையும் கொண்டுவந்து வைத்தது; மனிதர்களின் உடலிலிருந்து பேய்களை விரட்டும் என்று சொல்லி மரத்துண்டுகளைக் கொண்டுவந்து நிரப்பிற்று! மூடநம்பிக்கை, சித்ரவதைக்கான கருவிகளைக் கண்டுபிடித்து, அவற்றைப் பயன்படுத்தச் செய்தது; ஆடவரையும் பெண்டிரையும் உயிரோடு வைத்துச் சித்ரவதைக்கு ஆளாக்கியது; கோடிக்கணக்கான மக்களுக்கு விலங்குகளைப் பூட்டிற்று; நூறாயிரக்கணக்கானவர்களை நெருப்பிலிட்டு அழித்தது! மூடநம்பிக்கை, பைத்தியக்காரத்தனத்தை அந்தராத்மாவின் ஆலோசனை என்று தவறாக எடுத்துக்கொண்டது; பைத்தியக்காரர்கள் உளறுவதை அசரீரி வாக்காக, எண்ணிக்கொண்டது; மகான்கள் மனங்குழம்பிக் கூறுவதை ஆண்டவனின் அறிவு என்று கருதிக்கொண்டது! மூடநம்பிக்கை, நலம்புரிவோரைச் சிறையிலடைத்தது; சிந்தனையாளர்களைச் சித்ரவதை செய்தது; உறுதியுடையோரைக் கொன்றது; உடலைச் சங்கிலியால் பிணைத்தது; உள்ளத்திற்கு விலங்குகளிட்டது; பேச்சுரிமை முழுவதையும் அழித்தது! மூடநம்பிக்கை, எல்லாவித வழிபாட்டுரைகளையும், சடங்கு முறைகளையும் நமக்கு அளித்தது; கீழே விழுதல், முழங்காற்படியிடுதல், வணங்கிநிற்றல் போன்றவைகளையெல்லாம் கற்றுக்கொடுத்தது; மக்களை மக்களே வெறுப்பதற்கும், மகிழ்ச்சியை அழிப்பதற்கும், மக்களின் உடலில் காயங்களை உண்டு பண்ணுவதற்கும், புழுதியில் கிடந்து புரளுவதற்கும், மனைவியையும் குழந்தைகளையும் விட்டுவிட்டு ஓடுதற்கும், உடன் வாழ்வோரை வெறுத்து ஒதுக்குதற்கும், பயனற்ற நோன்பிலும் வழிபாட்டுரையிலும் வாழ்நாட்களைக் கழிப்பதற்கும் கற்றுக்கொடுத்தது! மூடநம்பிக்கை, மனிதாபிமானமாவது மிகக்கீழானது, தாழ்ந்தது, கெட்டது என்று கற்றுக்கொடுத்தது; தந்தையார்களைக் காட்டிலும் பாதிரிமார்கள் தூய்மையானவர்கள் என்றும், தாய்மார்களைக் காட்டிலும் பெண் துறவிகள் புனிதமானவர்கள் என்றும் கற்றுக்கொடுத்தது; உண்மையைக் காட்டிலும் பக்தி நம்பிக்கையே உயர்ந்தது என்று கற்றுக்கொடுத்தது; ஏமாற்றுத்தனம் மோட்சத்திற்கு அனுப்பிவைக்கும் என்று கற்றுக்கொடுத்தது; ஐயப்படுவது நரகத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் வழி என்று கற்றுக் கொடுத்தது; அறிவைவிட நம்பிக்கையே சிறந்தது என்று கற்றுக்கொடுத்தது; எதற்கும் சான்று கேட்பது ஆண்டவனைப் பழிப்பதாகும் என்று கற்றுக்கொடுத்தது! மூடநம்பிக்கை, முன்னேற்றத்திற்கு எப்பொழுதும் பகையாகவே இருந்து வருகிறது, எப்பொழுதும் பகையாகவே இருந்துவரும்; கல்வியின் எதிரியாக எப்பொழுதும் இருந்துவருகிறது, வரும்; உரிமையின் கொலையாளியாக எப்பொழுதும் இருந்துவருகிறது, வரும்! மூடநம்பிக்கை, அறிந்த ஒன்றை அறியாத ஒன்றிற்கும், நிகழ்காலத்தை எதிர்காலத்திற்கும், இந்த உண்மை உலகத்தைக் கண்டறியாத வரும் உலகத்திற்கும் பலியிட்டுவிடுகிறது! மூடநம்பிக்கை, சுயநலம் நிறைந்த ஒரு மோட்ச உலகத்தையும், பழிக்குப் பழிவாங்கும் ஒரு நரக உலகத்தையும் நமக்கு அளித்திருக்கிறது! மூடநம்பிக்கை, உலகில், வெறுப்பையும், போரையும், குற்றத்தையும், மிகக் கீழ்த்தரமான கொடுமையையும், மிக அருவருப்பான கர்வத்தையும் நிரப்பிவைத்தது! மூடநம்பிக்கை, உலகம் முழுவதுமுள்ள அறிவியலின் ஒரே எதிரியாக இருந்துவருகிறது!

மூடநம்பிக்கை என்னும் இந்தப் பயங்கர விலங்கினால், நாடுகளும், இனங்களும் மிகவாக அழிக்கப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகளாகக், கடவுளின் நம்பிக்கைக்குகந்த பிரதிநிதி, இத்தாலியில் வாழ்ந்து கொண்டு வருகிறார். அந்த நாடு தேவாலயம்

களாலும், மடாலயங்களாலும், சத்திரங்களாலும் சாவடிகளாலும் நிரப்பப்பட்டிருக்கிறது; எல்லாவகையான போதகர்களாலும், புனித மனிதர்களாலும் அந்த நாடு நிரப்பப்பட்டிருக்கிறது. பல நூற்றாண்டுக் காலம், இத்தாலி, பக்திமான்கள் கொடுத்த பொன்னால் செழிப்புற்றிருந்தது. எல்லாச் சாலைகளும் ரோம் நகரை நோக்கியே சென்றன; அந்தச் சாலைகளெல்லாம், காணிக்கைகளை ஏந்திய புனித யாத்ரீகர்களால் நிறையப்பெற்றிருந்தன. அப்படியிருந்தும், எல்லாவகையான வழிபாட்டுமுறைகளைக் கொண்டிருந்தும், இத்தாலி, கீழ்நோக்கி சென்று, வீழ்ச்சியுற்று, செத்துப் புதைந்தது என்றுதான் சொல்லவேண்டும்; காவர், மாஜினி, காரிபால்டி போன்றவர்கள் தோன்றாமலிருந்திருப்பார்களேயானால், அது, இதுநேரம் மண்ணோடு மண்ணாய்ப் புதைந்து, கல்லறைக்குள் சென்றிருக்கும். அது வறுமையும் துன்பமும் அடைவதற்குப், புனித கத்தோலிக்க தேவாலயத்திற்கும் கடவுளின் நம்பிக்கையான பிரதிநிதிகளுக்குமே அது மிகவும் கடமைப்பட்டதாகும். அது வாழ்வு நடத்துவதற்கு, மூடநம்பிக்கையின் எதிரிகளுக்கே அது மிகவும் கடமைப்பட்டதாகும். சில ஆண்டுகளுக்கு முன்புதான், இத்தாலி, ஜியார்டானோ புரூனோ வைத்த நினைவுச் சின்னம் எழுப்பும் பெருஞ் செயலை செய்து முடித்தது! புரூனோ-"மூர்க்க மிருகக்கிறது" இரையாகிப்போனவர். இத்தாலி பெற்றெடுத்தவர்களிலே மிகச் சிறந்து விளங்கினவர்!



ஸ்பெயின், ஒருபொழுது, உலகில் பாதிப் பகுதிக்குச் சொந்தக்காரியாய்த் திகழ்ந்தது; அவளுடைய பேராசைக் கைகளில் உலகின் பொன்னும் வெள்ளியும் நிறைந்திருந்தன. அந்த நேரத்தில் உலக நாடுகளெல்லாம், மூட நம்பிக்கை என்னும் இருளில் மூழ்கியிருந்தன. அந்தச் சமயத்தில் இந்த உலகமானது புரோகிதர்களால் ஆளப்பட்டுவந்தது. ஸ்பெயின் அதன் மதக் கொள்கையை, விடாப்பிடியாகப் பற்றியிருந்தது சில நாடுகள் சிந்திக்கத் தொடங்கின; ஆனால் ஸ்பெயின் மத நம்பிக்கையை இழக்காமலேயே இருந்தது. சில நாடுகளில் புரோகிதர்கள் தங்கள் ஆதிக்கத்தை இழந்தனர்; ஆனால், ஸ்பெயினில் மட்டும் அவர்கள் ஆதிக்கம் அழியவில்லை. ஸ்பெயின் ஜெபமாலையை உருட்டிக்கொண்டும், கன்னி மேரியைத் துதித்துக்கொண்டும் இருந்தது. ஸ்பெயின், அதனுடைய ஆன்மாவைக் காப்பாற்றுவதில் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தது. அது, தன்னுடைய பேராசையால், தன்னைத், தானே அழித்துக்கொண்டது. அது இயற்கைக்கு மீறிய ஆற்றலை நம்பியிருந்தது. அது அறிவைப் பற்றி நிற்கவில்லை, மூடநம்பிக்கையையே பற்றி நின்றது. அதனுடைய வழிபாட்டுமுறைகளெல்லாம், பதிலளிக்கப்படவேயில்லை. மகான்களெல்லாம் இறந்துபோனனர். அவர்கள் என்ன செய்வார்கள், பரிதாபத்திற்குரியவர்கள்! கடவுள்தன்மைகொண்ட மேரி யாதொன்றையும் கேட்டாளில்லை. சில நாடுகள் புதிய நாளின் விடியலில் இருந்தன; ஆனால் ஸ்பெயின் மட்டும் இரவிலேயே தங்கியிருந்தது. சிந்தித்த மனிதர்களையெல்லாம், அது, தீயைக் கொண்டும் வாளைக்கொண்டும் தீர்த்துக் கட்டியது. மத விசாரணைக் குழுவினால் விசாரிக்கப்பட்டவர்களின் மீது கொலைத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்படும் நாளே, ஸ்பெயினின் சிறந்த திருவிழா நாளாகும். மற்ற நாடுகள் வளர்ந்து கொண்டு போகும்போது, ஸ்பெயின் மட்டும் தேய்ந்துகொண்டு சென்றது. நாளுக்குநாள் அதனுடைய அதிகாரம் குறைந்துகொண்டே வந்தது; ஆனால் அதனுடைய பக்தி நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே சென்றது. குடியேற்ற நாடுகளை, அது ஒன்றன்பின் ஒன்றாக இழந்துகொண்டே வந்தது; ஆனால் அது, தன்னுடைய மதக் கொள்கையைமட்டும் வைத்துக் காப்பாற்றிக்கொண்டேயிருந்தது. சில நாட்களுக்கு முன்புதான், அது தன்னுடைய கடவுளையும் புரோகிதர்களையும், மந்திரங்களையும் தாயத்துக்களையும், புனிதத் தண்ணீரையும் உண்மைச் சிலுவையின் மரத்துண்டுகளையும் நம்பிக்கொண்டு, பெரிய குடியரசு நாட்டின்மீது போர்தொடுத்தது. பாதிரிமார்கள், படையினரை வாழ்த்தியனுப்பினர்; புனிதத் தண்ணீரைக் கப்பல்கள்மீது தெளித்தனர். அப்படியிருந்தும், அதனுடைய படைகள் தோற்கடிக்கப்பட்டன; அதனுடைய கப்பல்கள் தாக்கப்பட்டு, உடைக்கப்பட்டுக் கொளுத்தப்பட்டன. அது ஆதரவற்ற நிலையை அடையும்போது, நட்புறவு செய்துகொள்ள பணிந்து சென்றது. ஆனாலும், அது தன்னுடைய மதக் கொள்கையை அப்பொழுதும் அப்படியே கொண்டிருந்தது; அதனுடைய மூடநம்பிக்கை அழிந்துவிடவில்லை. பரிதாபத்திற்குரிய ஸ்பெ

தோன்ற அவர்களும் அப்படியே நின்றுவிடுகின்றனர். அப்படி அவர்களுக்கு வியப்புணர்ச்சி தரும் காட்சி என்னவென்றால், சிறுபிள்ளைகளும் பெரியவர்களும் சாரை சாரையாகச் சோற்று உருண்டையைக் கையிலேந்திச் சென்றுகொண்டிருக்கிறார்கள். கையிலே சோற்றுருண்டையை வைத்துக்கொண்டு, வரிசையாகச் செல்வது, காலந்தவறாமல் பொழியும் மழை பெய்யுங் காலத்தை எதிர்பார்த்துத், தம் முட்டைகளை எடுத்துக்கொண்டு, மேட்டு நிலத்தினை யடைய மிகச் சிறிய எறும்புகள் சாரை சாரையாய் வரிசையாய் போவதைப் போலிருக்கிறது. இந்தக் காட்சி அந்த ஏழையரின் கண்ணையும் கருத்தையும் பறிக்கிறது.

அந்த வறிய புலவன் அப்படிச் செல்பவர்களைப் பார்த்து, மிக்க ஆவலுணர்ச்சியோடு, "நீங்களெல்லாம் எங்கிருந்து வருகிறீர்கள்" என்று கேட்கிறான்.

"நாங்களெல்லாம் வள்ளல் பண்ணன் வீட்டிலிருந்து வருகிறோம். அவர் வீடு அதோ இருக்கிறது. நீங்களும் சென்றால் சோறு பெறலாம். விரைவாகப் போங்கள்" என்று அவர்கள் விடையிறுக்கிறார்கள்.

"அவர் வீடு எங்கே ஐயா இருக்கிறது?... எங்கே ஐயா இருக்கிறது?...சற்றுக் காட்டுங்கள் ஐயா!....யாரும் காட்டமாட்டீர்களா?".... என்று கேட்டுக்கொண்டே போகிறான் அப்புலவன்.

எதிரே பாட்டிசைப்பதிலே வல்ல இரண்டு பாணர்கள், பண்ணனிடத்தில் பரிசுகள் பல பெற்றுக்கொண்டு மகிழ்ச்சிக்கோலத்தோடு வருகிறார்கள்.

ஏழைப் புலவனும் அவனது சுற்றத்தாரும், மக்கள் சோறுண்ணும் பேரிரைச்சலை மிகக் குறுகிய தொலைவில் கேட்டும், பிள்ளைகளும் பெரியவர்களும் சோற்று உருண்டைகளை ஏந்திச் செல்வதைப் பார்த்துங்கூட, "அவர் வீடு எங்கே இருக்கிறது? அவர் வீடு எங்கே ஐயா இருக்கிறது?" என்று மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டே வரும் இரங்கத்தக்க காட்சியை அந்தப் பாணர்கள் இருவரும் பார்க்கிறார்கள். வள்ளலைப் பார்க்கவேண்டுமென்ற பெருவிருப்பத்தோடு வரும் வறியவர் கூட்டத்திடம் அப்பாணர்களுக்கு இரக்கவுணர்ச்சி ஏற்படுகிறது.

ஒரு பாணர் மற்றொரு பாணரைப் பார்த்து, "பாணரே! பார்த்தீரா அந்த வறியவனை! அவனுடைய தோற்றத்தையும், பேச்சையும் பார்க்கும்போது அவன் ஒரு புலவனாக இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. பண்ணனிடம் பரிசில் பெறும் நோக்கோடு வருகிறான் போல் இருக்கிறது. அவனுடைய சுற்றத்தாரைப் பார்த்தீரா! ஆ! எவ்வளவு வறுமைக் கோலத்தோடு காட்சியளிக்கிறார்கள்!" என்று குறிப்பிடுகிறார். அதற்குள் அந்தப் புலவன் அப் பாணர்களை நெருங்கிவிடுகிறான்.

"அவர் வீடு எங்கே இருக்கிறது?" என்று புலவன் பாணரைப் பார்த்துக் கேட்கிறான்.

"யார் வீட்டைப் பற்றிக் கேட்கிறீர்கள்?" என்று அறியாதார்போல ஒரு பாணர் கேட்கிறார்.

"அதுதான், பசிப்பிணியைப் போக்கும் மருத்துவனின் இல்லத்தைப் பற்றிதான் கேட்கிறேன்" என்று, பாணர்கள் அங்கிருந்துதான் வரக்கூடும் என்பதை அறிந்துகொண்டு புலவன் கூறுகிறான்.

பாணர்கள் 'பசிப்பிணி மருத்துவன்' என்ற சொற்களைக் கேட்டவுடன் மகிழ்கிறார்கள்; தங்களை யறியாமலேயே புன்முறுவல் பூக்கிறார்கள்.

புலவன் "அவரது இல்லம் அண்மையிலிருக்கிறதா? சேய்மையிலிருக்கிறதா? கூறுங்கள் ஐயா?" என்று ஆவலோடு கேட்கிறான்.

பாணர்கள் தாங்கள் பரிசுகள் பெற்று வந்துள்ள நிலைமையையும், பண்ணனின் பரிசு அளிக்கும் தன்மையையும் விளக்கிக்கூறி, பண்ணனின் மனையைச் சுட்டிக்காட்டி, விரைவில் போய்ப் பரிசு பெற்றுக்கொள்ளும்படிப் புலவனுக்குக் கூறுகிறார்கள்.

புலவன் தன் சுற்றத்தோடு பண்ணனின் மனைநோக்கி விரைந்து செல்கிறான்.

புலவனுக்கு வழிகாட்டி அனுப்பிவைத்த பாணர், அவன் செல்வதைச் சிறிது நேரம் திரும்பிநின்று பார்த்துவிட்டுச், சிறுகுடி கிழான் பண்ணனின் வள்ளல் தன்மையைப்பற்றி நினைந்து, மனமுருகி, 'யான் உயிர்வாழும் நாளையும் பெற்றுப் பண்ணன் வாழ்வானாக!'

பசிப்பிணி மருத்துவம்

[எழினி]

ஏழைப் புலவன். அவனைச்சுற்றி மொய்த்துக்கிடக்கிறது பெருங்குடும்பம். புலமை இருக்கிறது அவனிடம் ஏராளமாக; ஆனால் புலமையினால் அவனுக்கு ஏற்படும் மகிழ்ச்சியை மிஞ்சும் அளவுக்கு, வறுமை அவனை வாட்டி வதைக்கிறது. வாழும் வகை காணாது தவிக்கிறான். எங்கேனும் சென்று, யாரையேனும் வள்ளலைப் பார்த்துத் தம் புலமையைக் காட்டிப் பரிசில் பெற்று, அதனைக் கொண்டு குடும்பத்தைக் காப்பாற்றலாம் என்று எண்ணிக் கொண்டு நாடு சுற்றக் கிளம்புகிறான். வறுமையில் வாடும் தனது பெரிய குடும்பத்தை உடன் அழைத்துக்கொண்டு புறப்படுகிறான்.

அண்மையில் எங்கேனும் அண்டினோர்க்கு ஆதரவு அளிக்கும் வள்ளல் பெருந்தகையினர் யாரேனும் இருக்கிறார்களா என்று ஊராரிடம் உசாவுகிறான். சிறிது தொலைவில் சிறுகுடி என்ற ஒரு ஊர் இருக்கிறதென்றும், அங்கே வேளாண் குடியிற் பிறந்த பண்ணன் என்ற ஒரு வள்ளல் வாழ்கிறான் என்றும் செய்தி அப்புலவனுக்கு எட்டுகிறது. தனது சுற்றத்தை அழைத்துக்கொண்டு அவ்வூர் நோக்கி நடக்கிறான்.

பசியோ அவர்கள் எல்லோரையும் வாட்டுகிறது; தொலைவோ நீண்டுகொண்டு போவதாகத் தெரிகிறது. எப்படியோ தள்ளாடித் தள்ளாடி வருந்தி நடந்து, சிறுகுடிக்கு அருகில் வந்து சேருகிறான். ஊரை நெருங்க நெருங்கச் சோற்றுப் பட்டாளத்தின் சாப்பாட்டு இரைச்சல் பெருகிக்கொண்டேயிருக்கிறது. புதிதாகப் பழுத்த பழமரத்தில், பறவைகளெல்லாம் கூடிக் கொண்டு எழுப்பும் கூச்சல் எப்படிச் செவியில் வந்து படுமோ, அப்படிப்பட்ட ஒருவகைக் கூச்சல் அந்த வறியவனின் செவியில் விழுகிறது. ஆனால் அந்தக் கூச்சல் சோறுண்ணும் போது வறிய மக்கள் எழுப்பும் பேரிரைச்சல் என்பதை அவன் உணர்ந்துகொள்கிறான். அவனது உள்ளத்தில் உறுதி பிறக்கிறது; முகம் மலர்கிறது; கண் ஒளிர்கிறது. உறுதிப்பாட்டோடு ஓசை வந்த அந்த ஊர்ப்பக்கம் நோக்கி நகர்கிறான்.

சிறிது தொலைவு சென்றவுடன் ஒரு காட்சியைக் காணுகிறான்; அப்படியே வியப்புணர்ச்சியோடு ஆவலுணர்ச்சியும் கலக்கத் தயங்கி நின்றுவிடுகிறான். அவனுடைய மனைவி மக்கள் சுற்றத்தார் கண்களில் ஏக்கமும் களிப்பும்

யின்! மதத்திற்கு இரையாகி, பக்தி நம்பிக்கையால் பாழடைந்தது!

போர்ச்சுகல், நாளுக்குநாள் ஏழையாகிச் செத்துக்கொண்டிருக்கிறது; என்றாலும் அது மத பக்தியைப் பற்றிக்கொண்டு நிற்கிறது. அதனுடைய வழிபாட்டுரைகள், விடையிறுக்கப்பட்டதில்லை; ஆனாலும் அது இன்னமும் அவைகளை ஓதிக்கொண்டிருக்கிறது. ஆஸ்திரியா, கிட்டதட்ட அழிந்துவிட்டது; மூட நம்பிக்கைக்கு இரையாகிவிட்டது. ஜெர்மனி இரவின் இருட்டை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது. கடவுள், கொலைவெறியை அதன் அரியணையில் ஏற்றிவைத்துள்ளார். மக்கள் அவனுக்கு அடங்கியே நடக்கவேண்டும். தத்துவாசிரியர்களும் அறிவியல் அறிஞர்களும், ஆண்டவன் 'அனுமதி'யோடு ஆளும் அவ்வரசன் முன்னால் மண்டியிட்டுத் தாழ்ந்துகிடக்கிறார்கள்; அரசன் அவர்களைப் பொம்மைகளாக மதிப்பிடுகிறான் எல்லாம் மூடநம்பிக்கையின் விளைவு!

116

என்று வாயார வாழ்த்திவிட்டுத் தம்வழியே ஏகுகிறார்.

ஃ ஃ ஃ

இது புறநானூறு 173-ம் செய்யுளில் கண்ட கருத்தின் சொல்லோவியமாகும். சிறுகுடி என்ற ஊரில் வாழ்ந்துவந்த பண்ணன் என்ற கொடையாளியின் வள்ளல் தன்மையை இப்பாட்டின் மூலம் புகழ்ந்துரைக்கிறான் கிள்ளிவளவன் என்ற சோழ மன்னன். இந்தச் சோழ மன்னன் குளமுற்றம் என்ற இடத்தில் இறந்து பட்டவனாவான். சோழமன்னனே வியந்து கூறும் அளவுக்குப் பண்ணன் சிறப்புற்றிருந்தான் என்றால், அவனது வள்ளல்தன்மை எத்துணைச் சிறந்ததாக இருக்கவேண்டும் என்பதை யாரும் எளிதில் உய்த்துணரலாம். பண்ணன் ஏழை எளியவர்களின் பசிக்கொடுமையைப் போக்குவதிலே கண்ணுங்கருத்துமாக இருந்துவந்தான் என்பதைக் கிள்ளிவளவன் 'பசிப்பிணி மருத்துவன்' என்ற அழகான சொற்றொடர்களால் விளக்கிக்காட்டுகிறான். கிள்ளிவளவன் இயற்கைக்கு மாறுபடாத கற்பனைக் காட்சியின்மூலம் பண்ணனின் கொடைத்திறனை வெளிப்படுத்தும் மாண்பு போற்றிப் புகழ்வதற்குரியதாகும். சிறுகுடி கிழான் பண்ணனைக் கிள்ளிவளவன் மட்டுமின்றி, கோவூர்கிழார், மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் போன்ற புலவர்களும் சிறப்பித்துப் பாராட்டியுள்ளார்கள்.

ஃ ஃ ஃ

யான்வாழும் நாளும் பண்ணன் வாழிய
பாணர் காண்(க)இவன் கடும்பின(து) இடும்பை
யாணர்ப் பழுமரம் புள்இமிழ்ந்(து) அன்ன
ஊண்ஒலி அரவந் தானும் கேட்கும்
பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி
முட்டை கொண்டு வன்புலம் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்ஒழுக்(கு) ஏய்ப்பச்
சோறுடைக் கையர் வீறுவீ(று) இயங்கும்
இருங்கிளைச் சிறாஅர்க் காண்டும் கண்டும்
மற்றும் மற்றும் வினவுதும் தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே.

சிறுகுடிக்கிழான் பண்ணனைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பாடியது.

[புறம்—173]

[கடும்பு - சுற்றம்; இடும்பை - துன்பம்; யாணர் - புது வருவாயையுடைய; பழுமரம் - பழுத்த மரம்; புள் - பறவை; இமிழ்ந்தன்ன - கூச்சலிடுவதைச் செய்தாற்போல; ஊண் - உணவு; ஒலி அரவம் - ஆரவாரம்; பொய்யா எழிலி - காலந்தப்பாத மழை; பெய்விடம் நோக்கி - பெய்யுங்காலத்தைப் பார்த்து; வன்புலம் - மேட்டுநிலம்; நுண் - மெல்லிதான; சில் ஒழுக்கு - சிலவாகிய செல்லும் நெறி; ஏய்ப்ப - ஒப்ப; வீறுவீறு - வேறுவேறு; இயங்கும் - போகும்; இருங்கிளை - பெரிய சுற்றத்தோடுகூடிய; சிறாஅர் - பிள்ளைகள்; காண்டும் - காண்பேம்; வினவுதும் - கேளாநின்றேம்; தெற்றென - தெளிய; அணித்தோ - அண்மையிடத்ததா; சேய்த்தோ - சேய்மையிடத்ததா.]

தொலைபேசி

"ஹலோ! யார் பேசுகிறது!"

இப்படிப்பட்ட பொருளைத் தரும் சொற்கள், ஏறத்தாழ நான்கு கோடி தொலைபேசிகளில் (Telephones) அன்றாடம் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு, ஒரு அறையிலிருந்து மற்றொரு அறைக்கு, ஒரு நகரிலிருந்து மற்றொரு நகருக்கு, ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு, ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்திற்குத் தொடர்பை உண்டாக்கிவரும் ஒரு பெரும் பற்றுக்கோடு தொலைபேசி ஆகும்.

தொலைபேசி இல்லாமல் உலகை விரைவாகச் செயலாற்றும் உலகமாக நம்மால் உருவாக்கி இருக்கமுடியுமா? இயலாதென்றே எளிதில் இயம்பிவிடலாம்! 'ஆண்டவனைக்' கண்டுபிடித்து, 'அவன்' அருமை பெருமைகளை 'உலகு உய்யும்பொருட்டு' எடுத்துச் சொல்வதாகப் பாடுபட்ட 'மகான்கள்' உலகிற்குப் புரிந்த நன்மைகளைவிட, ஆயிரக்கணக்கான மடங்கு அதிகமாகவே தொலைபேசியைக் கண்டுபிடித்த அறிவியல் அறிஞன் உலகிற்குப் புரிந்துள்ளான்.

ஏறத்தாழ எழுபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன், அமெரிக்காவில், பாஸ்டன் நகரில், ஒரு வீட்டில், ஒரு சிறு அறையில்தான் முதன் முதல் மனிதன் பேசிய பேச்சு அப்படியே ஒரு கருவியால் திரும்ப ஒலித்துக் காட்டப் பெற்றது.

"மிஸ்டர் வாட்சன், இங்கே வாரும்! நான் உம்மைக் காண விரும்புகிறேன்."

இவை, வானமண்டலத்தில் தாமாக ஒலிப்பதாகக் கற்பனை செய்துகொள்ளப்பட்ட 'அசரீரி' வாக்கல்ல! தொலைவில் உள்ள ஒருவருடன் உண்மையாகவே பேசப்பட்ட சொற்களாகும்! இப்பெரு வியப்பினை முதன் முதல் வரலாற்று உண்மையாக்கிக்காட்டிய பேரறிஞர் அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல் (Alexander Graham Bell) என்பவராவார். அவர் 1876-ம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் ஒருநாள் இந்தப் பேருண்மையைக் கண்டுபிடித்து உலகிற்கு அறிவித்தார்.

கம்பிகளின் மூலம் ஒலி அலைகளை அனுப்ப இயலாதா என்ற எண்ணம் கிரஹாம் பெல்லுக்கு முன்னால் பல அறிவியல் அறிஞர்களின் மூளையைக் குடைந்துகொண்டுதானிருந்தது. அவர்கள் பல்வேறு வழிகளில் முயன்றும் பார்த்தார்கள். அப்படிப்பட்டோரின் முயற்சிகள் கிரஹாம் பெல்லுக்கு பெரிதும் துணைபுரிவதாக அமைந்தன. ஹெல்ம் ஹாட்ஜ் (Helmholtz) என்ற ஜெர்மனியைச் சேர்ந்த அறிவியல் அறிஞர் இரண்டு கோப்பைகளை இரண்டு பக்கத்தில் வைத்து, இடையே ஒரு கம்பியைப் பொருத்தி ஆராய்ச்சி நடத்தப் பார்த்தார். முயற்சி தெளிவான முடிவைத் தரவில்லை. சார்லஸ் வீட்ஸ்டோன் (Charles Wheatstoen), பிலிப் ரீஸ் (Philip Reis), சார்லஸ் போர்ஸியல் (Charles Bourseul), எலீஷா கிரே (Elisha Gray) போன்ற, பல்வேறு நாட்டைச் சேர்ந்த அறிவியல் அறிஞர்கள் பல்வேறு வழிகளில் முயன்றுபார்த்தார்கள். அவர்கள் எல்லோராலும் பேச்சைத் தெளிவாக்கிக் காட்டும் கருவியொன்றைக் காண முடியவில்லை. ஆனால் அலெக்ஸாண்டர் பெல் தாம் தொலைபேசியைத் திறம்பட உருவாக்கி உலகிற்கு ஈந்தவராவார்.

பெல் தொலைபேசியைக் கண்டுபிடிக்கும் நிலைக்கு வந்ததே வேடிக்கையான வரலாறாகும். அலெக்ஸாண்டர் பெல்லின் தந்தையார், செவிடர்கள் பிறருடைய உதட்டசைவையும், தொண்டை அசைவையும் கண்டு எப்படிப் பேச்சைப் புரிந்துகொள்ளலாம் என்பதைக் கண்டறிந்து, அதனைச் செவிடர்களுக்குச் சொல்லிக்கொடுத்து வாழ்க்கைப்பணி ஆற்றி

வந்தார். பெல் சிறு வயதில் தந்தையாருக்கு உதவியாக உடனிருந்து பணியாற்றிவந்தார். அவர் இருபத்திமூன்று வயதுடையவராக ஆகும்போது, தமது உடலுக்கொத்த தட்ப வெப்ப நிலையை எண்ணி அமெரிக்காவுக்குச் சென்றார். அங்கு அவர் தமது தந்தையாருடைய வேலையைப் பார்த்துவந்ததோடு, மேற்கொண்டு அதுபற்றிய விரிவான ஆராய்ச்சியில் ஈடுபட்டார். ஒலியைத் தெளிவாக்கிக்காட்டும் கருவி ஒன்றைக் கண்டுபிடிப்பதிலே மிக்க ஆர்வஞ் செலுத்திவந்தார். பேச்சின் ஒலி அலைகளால் அசைவு உண்டாகக்கூடிய ஒரு வட்ட வடிவான படுதா கட்டிய தட்டோடு ஒரு கம்பியைப் பொருத்தி, அதன் மறு முனையில் அதே ஒலி அலைகள் எழும்புகின்றனவா என்று ஆராய்ந்தார். அந்தநாட்களில் பாஸ்டன் நகரில் அவர் செவிடர்கள் பேசிப்பழகுவதற்கான பள்ளிக்கூடம் ஒன்றை நிறுவியிருந்தார். அந்தப் பள்ளியில் இரண்டு பெரும் பணக்காரர்களின் பிள்ளைகளும் சேர்ந்து பயின்றுவந்தனர். அந்தப் பணக்காரர்கள், பெல்லின் ஆராய்ச்சிக்குத் தேவையான பொருளுதவி செய்ய மனமுவந்து முன்வந்தனர்.

பெல், தாமஸ் வாட்சன் (Thomas Watsan) என்ற மின் தொழிலாளி ஒருவரோடு தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு, மின் ஆற்றலின் உதவியால், தாம் எண்ணும் கருவியைக் கண்டுபிடிக்க முடியுமா என்று முயன்றார். மின் ஆற்றலைப் பயன்படுத்தி செய்த முயற்சியில், ஒலிக்குறிப்புகள் தென்பட்டன; ஆனால் தெளிவான சொற்கள் புலப்படவில்லை. பெல்லும் வாட்சனும் பல ஆண்டுகள் இடைவிடாமல் உழைத்துக்கொண்டே வந்தனர். எல்லாவிதமான படுதா தட்டுக்களையும், எல்லாவிதமான கம்பிகளையும், எல்லாவிதமான அசைவுகளையும் பயன்படுத்தி முயன்று பார்த்தனர். பெல் தம் கையிலுள்ள எல்லாப் பொருள்களையும் ஆராய்ச்சிகளுக்கே செலவிட்டார். ஏதும் அற்ற வறியராகும் நிலையை எய்தினர்.

ஒருநாள் வாட்சன் பாஸ்டன் நகரிலிருந்த ஒரு சிறிய வீட்டின் இரண்டு மாடிப் படிக்கட்டுகளையும் தாண்டிக்கொண்டு, ஒரே ஓட்டமாக வந்து பெல்லுக்கு முன்னால் நின்று, இரைக்க இரைக்க, "தங்கள் குரலைக் கேட்டேன்" என்று மகிழ்ச்சிப் பெருக்கில் கூறினர்.

அதற்கு மறுமொழியாக பெல், "தாங்கள் சொல்லியதையும் நான் பெரும்பாலும் கேட்டேன்" என்று சொல்லித் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார்.

மேலும் மேலும் வேலை மும்முரமாக நடந்துகொண்டேயிருந்தது. 1876-ம் ஆண்டு மார்ச் சுத்திங்களில் ஒருநாள் பெல் வெற்றிபெற்றார்; அவர் பேசிய "மிஸ்டர் வாட்சன், இங்கே வாரும்! நான் உம்மைக் காண விரும்புகிறேன்" என்ற சொற்கள், வாட்சன் தங்கியிருந்த கேட்ட சிறிய அறையில், வாட்சனின் காதுகளில் ஒலித்தன. இந்தத்தடவை "பெரும்பாலும் கேட்டது" என்ற நிலை மாறி, "முழுவதும் தெளிவாகக் கேட்டது" என்ற நிலை ஏற்பட்டது.

அலெக்ஸாண்டர் பெல், தமது இருபத்தொன்பதாவது ஆண்டின் பிறந்தநாளன்று, தாம் கண்டுபிடித்த தொலைபேசியின் செய்யும் உரிமையைப் பெற்றார். பேச்சுப் பயிற்சியின் பேராசிரியரான பெல், வியப்புக்குரிய தொலைபேசிக் கருவியைத் தாமே கொண்டிருந்தபோதிலும், அதனைப் பயன்படுத்தும் உரிமையைத் தாமே பெற்றிருந்தபோதிலும், அவர் யாருக்கும் தெரியாத. யாராலும் கவனிக்கப்படாத ஒருவராகவே இருந்துவந்தார்.

பெல்லுக்குப் பொருளுதவி புரிந்துவந்த செல்வந்தர்கள், அவ்வாண்டு பிலடெல்பியா நகரில் நடைபெற்ற பொருட்காட்சியில், தொலைபேசிக் கருவியை வைத்துக் காட்டும்படி பெல்லுக்கு அறிவுறுத்தி, அதற்கான உதவிகளையும் புரிந்தனர். பெல் யாரோடும் வலிந்து சென்று பழகுபவர் அல்லர்; நாணம் வெட்கம் மிகுதியுடையவர். பெல், பொருட்காட்சி சாலையில் தம்முடைய கருவியைக் காட்சிப்பொருளாக வைத்து, அதனைப்பார்த்துப் பொதுமக்களும், அறிஞர்களும் வியப்படைவார்கள் என்று எதிர்பார்த்தார், பொருட்காட்சிக்கு வந்த பொதுமக்கள் யாரும் பெல்லின் கருவியை ஒரு பொருட்டாக மதித்துக் காண விரும்பவில்லை. பிரேஸிலின் பேரரசரான டாம் பீட்ரோ டி அல்காண்டரா பொருட்காட்சி சாலையைச் சுற்றிப் பார்த்துவரும்போது, கிரஹாம் பெல்லைப் பார்த்தார். ஒரு முறை பாஸ்டனிலுள்ள செவிடர் பள்ளிக்கூடத்துக்குச் சென்றபோது, பெல்லைப் பிரேஸில் பேரரசர் கண்டு பேசியிருக்கிறார். அந்த நினைவில், பெல்லைப் பார்த்ததும் மகிழ்ச்சி தெரிவித்து வணக்கம் கூறினர் காட்சிக்காக

வைத்திருந்த கருவியை வேலை செய்துகாட்டும்படி பெல்லிடம் கேட்டார். பெல்லும் வேலை செய்து காட்டினார்.

பேரரசர் "ஓ! அப்படியே பேசுகிறதே!" என்று சொல்லி தம் வியப்புணர்ச்சியைக் காட்டிக்கொண்டார். அவரைத் தொடர்ந்து ஆங்கில அறிவியல் அறிஞரான லார்டு கெல்வினும் அவரது மனைவியாரும் பெல்லின் காட்சிக்கூடத்தைக் காணவந்தார்கள். அவர்கள் இருவரும் மகிழ்ச்சிப் பெருக்கால் அப்பக்கம் இப்பக்கம் மாறிமாறி ஓடி, தொலைபேசியில் பேசிப் பார்த்துக்கொண்டனர். அதிலிருந்து எல்லோரும் பெல்லின் தொலைபேசிக் கருவியைப்பற்றி வியந்து கூறத் தலைப்பட்டதோடு, அதன் பயனையும் நன்கு உணரத்தலைப்பட்டனர். தொலைபேசி எங்கும் பரவிற்று; அது பரவாத இடம் இல்லை என்னும்படி பரவத் தொடங்கிற்று.

இங்கிலாந்துக்குத் தொலைபேசி முதன் முதலாக 1877-ல் வந்தபோது, அதனைத் தடைப்படுத்திச் சட்டம் இயற்றிற்று பிரிட்டிஷ் அரசாங்கம். பிறகு சிறிது நாட்களுக்கெல்லாம் எங்கணும் இடம் பெறுவதாயிற்று. வேல்ஸ் இளவரசியாக இருந்த அரசி அலெக்ஸாண்டரா, முதன் முதல் இங்கிலாந்தில் தொலைபேசிக் கருவியை நிறுவனம் செய்தார். அவர் தம்முடைய மாளிகைக்கும், தம் குழந்தைகள் வளர்ப்பு இடத்துக்கும் இடையே தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டார். போறிஞர் பெர்னாட்ஷா லண்டனுக்கு வந்தபோது, 1879-ல் தொலைபேசிக்குச் சந்தாதாரர்கள் சேர்த்துக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தாராம். பிலடெல்பியா பொருட்காட்சிசாலையில் வைக்கப்பட்டிருந்த தொலைபேசிக் கருவி, எவ்வளவோ மாறுதல்களுடன், இன்று உலகெங்கும் பரவி ஓங்குபுகழ் எய்தி நிற்கிறது.

கிரஹாம் பெல் அமைத்த அடிப்படையில் எவ்வளவோ ஆராய்ச்சிகள் பலராலும் செய்யப்பட்டு, தொலைபேசிக் கருவி எளிமையானதாகவும், சிறப்பானதாகவும் உருவாக்கப்பட்டது. எடிசன், டேவிட் ஹியூகீஸ், டி மான்சேல், கிளாரக், பிரான்ஸிஸ் பிளேக், ரெவரென்ட் ஹென்றி ஹன்னிங்க்ஸ் இன்னும்பல அறிவியல் அறிஞர்கள் தொலைபேசியைச் சிறந்ததாக உருவாக்கப் பல வழிகளிலும் பாடுபட்டனர்.

அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல் 1922-ல் இயற்கை எய்தியபோது, அவரிடம் காட்டும் மரியாதையின் அறிகுறியாக, அமெரிக்கா—கானடாவிலிருந்த ஒருகோடி எழுபதுலட்சம் தொலைபேசிகள் ஒரு நிமிடநேரம் அமைதியைக் கையாண்டன. தாம் கண்ட கனவை நனவாக்கிய மாவீரர்களிலே ஒருவரான கிரஹாம் பெல்லுக்கு உலகம் என்றென்றும் கடமைப்பட்டதாகும்.

"ஆழ்ந்த பொறுமையான சிந்தனையின் விளைவாகத்தான், எல்லா உண்மையான பெரிய கண்டுபிடிப்புகளெல்லாம் கண்டுபிடிக்கப்படுகின்றன."

—கிரஹாம் பெல்.

நீலவான்

கதிரவனிடத்திலிருந்து வரும் ஒளியில், வானவில்லில் நாம் காணும் ஏழு நிறங்களும் அடங்கியிருக்கின்றன. ஏழு நிறங்களும் ஒன்று சேர்ந்து வருவதால் வெண்ணிறமாக மாறுகிறது ஒரு முப்பட்டை கண்ணாடிகொண்டு கதிரவன் ஒளியை ஏழு நிறங்கள் கொண்டதாகப் பிரிக்க முடியும். ஒளிக்கதிர்கள் நீர் அலைகளைப் போல் பரவுந் தன்மை பெற்றது. பலநிறப்பட்ட கதிர்கள் ஒரே சீராகப் பரவாமல் வேறுபட்ட நீளங்களையுடைய அலைகளாகப் பரவுகின்றன. இதில் நீல நிறக் கதிர் மற்ற கதிர்களைவிட மிகவும் குறைந்த அலைநீளமுடையது. கதிரவன் ஒளி புகைவெளி (Atmosphere)யை ஊடுருவி பூமியைச் சேரும்போது, நீல நிறக் கதிர்கள் மற்றவைகளைவிட குறைந்த அலைநீளம் உடையதாக இருப்பதால் ஊடுருவும் வன்மை இழந்து, காற்றிலுள்ள நுண்ணிய பொருள்களாலும், புகைவெளியிலுள்ள நீராவியினாலும் சிதறியடிக்கப்படுகிறது. இக்காரணத்தால்தான் வான் நீலநிறத்துடன் தென்படுகிறது. நம்மைச் சூழ்ந்துள்ள புகைவெளி இல்லையெனில் வான் நீலமாகத் தோன்றாமல் கருப்பாகவேத் தோன்று

வேதாந்தியின் ஒருநாள்!

திடீரென்று ஒரு நாள் மெம்னனுக்கு வேதாந்தியாகிவிடவேண்டுமென்ற எண்ணம் உதித்தது. இத்தகைய விபரீத யோசனைகள், ஒவ்வொருவருடைய வாழ்விலும், ஓரிரு தடவைகளாவது வந்து, போவதுண்டு. அதே போலவே, சோம்பேரியாக இருந்த மெம்னனுக்கு அந்த எண்ணம் வந்தது. வேதாந்தியாகவேண்டுமென்றதும், மெம்னன் மனதிற்குள் பின்வருமாறு திட்டமிட்டுக்கொண்டான்.

இந்தச் சிறுகதை புகழ்பெற்ற பிரெஞ்சு புரட்சி இலக்கிய ஆசிரியர் வால்டேர் எழுதியதாகும். மத வேதாந்திகளின் பிற்போக்குத் தன்மைகளைக் கேலிசெய்து. வால்டேர் எழுதிய கட்டுரைகள், சிறுகதைகள், பலப்பல. அவற்றில் "மெம்னன்" என்ற தலைப்பில், கருத்துக்களை உள்ளடக்கிய கதை ஒன்றாகும்.

ஒரு முழு வேதாந்தியாக வாழ்க்கை நடத்துவதென்றால்,—அதுதான் உலகத்தில் முழு சாந்தியையும் பேரின்பத்தையும் தரவல்லது,—அதற்கு வாழ்வில் பற்று, பாசமெதுவும் இல்லாமலிருக்கவேண்டும், மனதில் எழும் ஆசாபாசங்களை அகற்றவேண்டும்; அவ்வளவுதானே, இது எனக்கு மிகவும் சுலபமானது. முதலாவதாக, பெண்களின்மீது எனக்கு ஆசையோ, காதலோ எதுவும் வராது. அதிரூப சுந்தரியாக இருந்தால்கூட, அவளைப் பார்த்ததும், 'சே! இந்த அழகு நிலையானதல்ல, சிவந்த கன்னங்கள் ஒடுங்கிவிடும், ஒளிவீசும் கண்கள் மங்கிப் பழுதாகிவிடும், கார்மேகக் கூந்தல் வெண்மையான நரைமயிராகிவிடும்." என்று அவளுடைய அழகு அடையக்கூடிய அழிவை மனத்தில் எண்ணிப் பார்த்து, மயங்கிவிடாமல் இருப்பேன்.

இரண்டாவதாக உண்ணுவதிலும், உறங்குவதிலும், மற்றவித போக்கியங்களிலும் நான் என்னை இழந்துவிட மாட்டேன். சுவையான அமுது, மதுரமான மது, இவைகளைக் காட்டி என்னைத் தெரிந்தவர்கள் அழைத்தாலும், அவைகளால் விளையக்கூடிய கேடுகளை நினைத்து, ஒதுங்கிவிடுவேன். உண்பதற்காகவே உயிர் வாழ்வது என்று இருக்கும் கடையன் அல்லவே நான்! என் மனம பரிசுத்தமாயிருக்கும், என் வாழ்வு வேதாந்த மயமானது! இதில் எந்த கஷ்டமுமின்றி நடந்துகொள்வேன்."

இப்படியாக வேதாந்தியாக வாழ்வதில் எந்த விதக் கஷ்டமும் இருப்பதாக மெம்னனுக்குத் தோன்றவில்லை, மாறாக மிகச் சுலபமானதாகவேப் பட்டது. அவனுக்குச் சிறிது சொத்து, பணம் இருந்தது ஆதலால் மற்றவர்களை எதிர்பார்த்து, அடங்கி வாழவேண்டிய அவசியமில்லை. இருப்பது போதும் என்ற மனோபாவமே நல்லது. "பிறரைக் கண்டு நான் பொறாமைப்படவில்லை, பிறர் என்னைக் கண்டும் பொறாமைப்படவேண்டியதில்லை." என்று மெம்னன் நினைத்துக்கொண்டான். அவனுக்குச் சில நண்பர்கள் இருந்தனர். அவர்களிடம் முன்போலவே நடந்து கொள்ளவேண்டியது, அதிகம் ஈடுபடாமலும், எட்டிப்போகாமலும், தாமரையிலைத் தண்ணீர்போல — அவ்வளவுதான். வேதாந்த வாழ்க்கையை நிச்சயமாக நடத்தலாம் என்று மெம்னன் நிச்சயித்துக் கொண்டான்.

இவ்வளவும், மெம்னன் தனது சிறிய அறைக்குள் உட்கார்ந்து, திட்டமிட்டு, வேதாந்தியாகிவிடுறதெனவும் முடிவு செய்துவிட்டான். இந்த முடிவுடன், வேதாந்தி—அறையின் ஜன்னல் கதவைத் திறந்துபார்த்தார். தெருவில் இரண்டு பெண்கள் வந்துகொண்டிருந்தனர். ஒருத்தி வயதுசென்றவள், மெதுவாக நடந்து வந்தாள்; பக்கத்தில் அழகும் இளமையும் ததும்பும் பருவத்தினளாக ஒரு பெண் தொடர்ந்துவந்தாள். பெருமூச்சுவிட்டும் கண்

12

லைக் கசக்கிக்கொண்டும், அழுததால் சிவந்த கன்னங்கள் அவளுடைய அழகை அதிகப்படுத்துவதாகவே இருந்தன. அவளைப் பார்த்ததும், நமது வேதாந்திக்கு இரக்கம் பிறந்தது, அது அவளுடைய அழகைப் பார்த்ததால் என்று யாரும் எண்ணிவிடக் கூடாது. இவர்தான் வேதாந்தியாயிற்றே, வேதாந்திக்குத்தான் அழகு, இளமை இவைகளைப்பற்றி கவலை கிடையாதே. அவளுடைய சோக நிலையும், அழுகையுமே வேதாந்தியிடம் இரக்கம் தோன்றக் காரணமாயிருந்தன.

வேதாந்தி மெம்னன் தெருப்பக்கம் வந்து, அந்த இருவரையும் அழைத்துத் துன்பத்துக்கான காரணங்களைக் கேட்டார். இளமங்கை தங்களுக்குற்ற துயரை எடுத்துரைத்தாள். அவள் தாய்தந்தையரற்றவளாம்! நிராதரவாக இருக்கும் அவளை அவளுடைய சிற்றப்பன் மிகக் கொடுமைப்படுத்தினனும்! வீடு வாசல்களை ஏமாற்றிப் பிடுங்கிக்கொள்ள திட்டமிட்டு, இவளை விரட்டிவிட்டானும்! “உங்களைப் பார்த்தால், மிக நல்லவராகவும், மேதாவியாகவும் இருக்கிறீர்கள்! என்னுடைய வீட்டிலிருக்கும் பத்திரங்களையும், உயில்களையும் பார்த்து எனக்கு ஏதாவது சாதகம் கிடைக்குமாவென்று பாருங்கள். உங்களைத்தவிர என்னைக் காப்பாற்றுவார் யாரும் கிடையாது” என்று அந்தப் பெண் கலங்கினாள். நிராதரவாக இருக்கும் அபலைப் பெண்ணுக்கு தகுந்த போசனைகளைக்கூறி, பாதுகாப்பு உண்டாக்க மெம்னன் சம்மதித்து, அவளுடைய வீட்டிற்குச் சென்றார், பரோபகாரச் சிந்தையுடன், வேதாந்த மனப்பான்மையுடன்.

அலங்கரிக்கப்பட்ட கூடத்தில், அழகான சோபாவின்மீது மெம்னன் அமர்ந்தார். அவருக்கு எதிரில் ஒரு தாழ்ந்த நாற்காலியில் அந்த இளம்பெண் அமர்ந்து, மிக அடக்க வொடுக்கத்துடன், சொத்து விவரங்களைப் பற்றி சொன்னாள். வேதாந்தி மிகச் சிரத்தையுடன் அவள் கூறுவதைக் கேட்டுவந்தார். தலையைத் தாழ்த்தி இளம் பெண் தன் சோகக் கதையை சொல்லிக்கொண்டிருந்தாள். கன்னத்தில் நீர் வழிந்தது. அதைத் துடைத்துக்கொண்டு, நிமிர்ந்தபொழுது வேதாந்தியின் கண்களை அந்தப் பெண்ணின் கலங்கிய கண்கள் சந்தித்தன. பின் தலையைத் தாழ்த்திக்கொண்டு கதையைத் தொடர்ந்து இளம்பெண் சொன்னாள், வேதாந்தியும் இரக்கத்துடன் கேட்டார். இடையிடையே இருவருடைய கண்களும் அடிக்கடி சந்தித்துக்கொண்டன. ஒவ்வொரு சந்திப்பின் பின்னும், கதை சோகமாகவும், உருக்கமாகவும் இருந்த . அந்த இளம் பெண்ணின் துயரம், வேதாந்தியிடம் இதயபூர்தமான அக்கரையையும், கவலையையும் உண்டாக்கியது. அவள் சொல்லும் கதையிலேயே இருவரும் ஈடுபட்டிருந்ததால், இருவருக்குமிடையில் இருந்த தூரம் குறைந்ததுகூட தெரியவில்லை. அவளுடைய குறைகளைத் தீர்த்து, தகுந்த பாதுகாப்புத் தரவேண்டுமென வேதாந்திக்கு உறுதியான எண்ணம் உண்டாயிற்று.

சிக்கல்களை எப்படித் தீர்ப்பது என்பதுபற்றி இருவரும் பேசினர், யோசித்தனர், பக்கத்தில் உட்கார்ந்தபடி. கவலைப்படவேண்டாமென ஆறுதலளித்தார், அந்தப் பெண்ணும் கவலைவிட்டு, புன்முறுவல் பூத்தாள். பின் வேதாந்தி மெய்யான உபதேச மொழிகளையும், ஆறுதல்களையும் அந்தப் பெண்ணுக்கு அளித்தார்.

இந்த உருக்கமான உபதேசக் கட்டத்தில், ஒரு முரடன்—அந்தப் பெண்ணுடைய சிற்றப்பன் கையில் பலமான தடியுடன் வீட்டிற்குள் நுழைந்தான். அங்கு இருந்த கோலங்கண்டு பயங்கரச் சத்தமிட்டான். இழிசெயல்புரிந்த இருவரையும் எமனுலகு அனுப்பாமல் விடேன் எனக் தாவிக்குதித்தான். இளம்பெண் தப்பி ஓடிவிட்டாள், வேதாந்தி மெம்னன் மட்டும் சிக்கிக்கொண்டார். மானத்தைக் காப்பாற்ற, கொலை செய்யவந்த அந்த முரடன், பணத்தைக் கொடுத்தால் சாந்தமாகிவிடுவான் என்று தெரிந்தது. எப்படியாவது தப்பினால் போதுமென, தன் வீட்டிலிருந்த பணம் முழுவதையும் எடுத்துக்கொடுத்து மெம்னன் தன்னை விடுவித்துக்கொண்டான். ஏதாவது இதுமாதிரி தகராறுகள் நிகழ்ந்துவிட்டால், வேதாந்திகளால் அவ்வாறு தப்பித்துக்கொள்ள முடிந்தது, அந்தக் காலத்தில்.

வெட்கமும், வேதனையும் அடைந்த நிலையில் மெம்னன் தன்னறைக்குள் உட்கார்ந்தார். அப்பொழுது, அவருடைய நண்பர்கள் நடத்தும் விருந்தொன்றுக்கு அழைப்பு வந்தது. வீட்டில் தனியாக இருந்தால், மனத்துயரம் அதிகமாகுமென்று எண்ணி, நண்பர்களைப் பார்ப்பதென்று மெம்னன் தீர்மானித்தார்.

காலையில் நேர்ந்த கவலை மறப்பதற்கு அது உதவியாயிருக்கும். அதன்பேரில் நண்பர்களைக் காண மெம்னான் போனார். வாடியிருக்கும் மெம்னானைப் பார்த்ததும் நண்பர்களெல்லாம் உபசாரம் செய்தனர். திராட்சை ரசத்தில் சிறிது பருகினால் கவலை மறையும் என்று சொன்னார்கள். கொஞ்சம் மது குடிப்பதால் குறையொன்றும் வந்துவிடாதென்று மெம்னான் யோசித்தார். கடவுள்களுக்கும், தேவதைகளுக்கும் மிகப் பிரியான பானம் மதுவல்லவா! சரியென்று, நண்பர்களின் பிடிவாதத்துக்காக வேதாந்தி மெம்னான் ஒரு கோப்பை மது அருந்தினான்; பின் கோப்பைகள் அதிகரித்தன, மெம்னானால் தடுக்க முடியவில்லை.

விருந்துக்குப்பின் சூதாட்டம் ஆரம்பித்தது. நண்பர்களுடன் பொழுது போக்குக்காக ஆடுவதில் தவறொன்றுமில்லையென மெம்னான் நண்பர்களுடன் உட்கார்ந்தார். பையிலிருந்த பணமெல்லாம் தீர்ந்துவிட்டது. பின் கடன் வாங்கினார், அதுவும் வளர்ந்தது. தன்னால் முடிந்ததைவிட நான்குபங்குக்குமேல் கடன் வாங்கிவிட்டார் மெம்னான். தோல்வி அதிகமாக, சண்டை சச்சரவு அதிகமாயிற்று. கடைசியில் கலவரம் ஏற்பட்டது, கையில் கிடைத்ததையெல்லாம் எடுத்து ஒருவர்மீதொருவர் வீசிக்கொண்டனர், நண்பர்கள். மெம்னான் தலைமீது பலமான காயமேற்பட்டது, கண்மீது அடிவிழுந்து ஒருகண் குருடாகிவிட்டது. மூர்ச்சையாகி விழுந்து, மெம்னானை வேலையாட்கள் தூக்கிக்கொண்டுபோய் அவர் வீட்டில்போட்டனர்.

சற்று மயக்கம் தெளிந்து, நினைவுவந்ததும், மெம்னான் பாங்கியில் இருந்த பணத்தை எடுத்துவர தனது வேலையாளை அனுப்பினார். அந்தப் பணத்தைக்கொண்டு முக்கியமான கடன்களை அடைத்துவிடலாமென அவர் நினைத்தார். பணம் வாங்கச்சென்ற வேலையாள் சோகக் குரலுடன் திரும்பினான். மெம்னான் பணம் போட்டிருந்த பாங்கி முழுகிவிட்டதாம்!

மெம்னானுக்கு கோபமும் ஆத்திரமும் பொங்கிவந்தது. கண்ணில் ஒரு கட்டுப் போட்டுக்கொண்டு, தன்னை மோசம் செய்த பாங்க்மீது ஒரு புகார் மனு எழுதிக்கொண்டு, அந்த ஊர் அரசரைப் பார்க்க மெம்னான் போனார். அரசமண்டபத்தில், ஊரிலிருந்து சீமான்களும், சீமாட்டிகளும், மெம்னானைப் பார்த்ததும் ஏளனமாகப் பேசினார்கள். அதைப் பொருட்படுத்தாமல் மெம்னான் அரசருக்காகக் காத்திருந்தார்.

கடைசியாக, தனது பரிவாரங்களுடன் அரசர் வந்தார். மெம்னான் அரசர்முன் விழுந்து, வணங்கி, தனது மனுவைத் தந்தார். அரசர் அந்த மனுவை வாங்கிப், பக்கத்திலிருந்த பிரபு ஒருவரிடம் கவனிக்கும்படிக் கொடுத்தார். பிரபு மெம்னானைத் தனிமையாக அழைத்துப்போய், "ஒற்றைக் கண்ணுடன் வந்து நிற்கும் ஒட்டாண்டியே! உனக்கு எவ்வளவு துணிவிருந்தால் பாங்கருக்கு எதிராக மனுச்செய்வாய்! அந்தப் பாங்கர் யார் தெரியுமா? என்னுடைய அபிமானஸ்திரீயின் தோழியினுடைய சொந்தக்காரன். மனுவைக் கிழித்துப் போட்டுவிட்டு, ஓடிப்போ, உன்னுடைய மற்றொரு கண்ணும் குருடாகாமலிருக்கவேண்டுமென்றால்!" என்று பயமுறுத்தினார்.

மனதுடைந்து, மெம்னான் தனது வீட்டுக்குத் திரும்பினான். ஆனால் வீட்டிலிருந்த சாமான்களையெல்லாம், கடன்கொடுத்தவர்கள் அகற்றிக்கொண்டிருந்தார்கள் ஏலமிடுவதற்காக. அங்கு நிற்கமுடியாமல், பக்கத்திலிருந்த மரத்தடியில் மெம்னான் வந்து உட்கார்ந்தான். அப்பொழுது அவனை ஏமாற்றிய இளமங்கையும், அவளுடைய சிற்றப்பனும் வந்தனர், மெம்னானுடைய அலங்கோல நிலையைப் பார்த்துச் சிரித்துப் பேசிக்கொண்டு சென்றனர்.

இரவு வந்தது. தனது வீட்டுக்குப் பக்கத்தில் வைக்கோலைப் பரப்பி அதில் மெம்னான் படுத்துக்கொண்டான். ஒரு நாள் பொழுதிற்குள் எவ்வளவு ஏமாற்றங்கள், மாறுதல்கள் நிகழ்ந்துவிட்டன. அறையில் உட்கார்ந்து வேதாந்தியாவதெனத் தீர்மானித்தபொழுது, பெண்களை வெறுத்துவிடுவது, மதுவைத் தள்ளிவிடுவது, கேளிக்கைகளை வெறுப்பது என்றெல்லாம் அவன் திட்டமிட்டான். திட்டமிட்டபின், சிறிது நேரத்துக்குள் ஒரு பெண்ணிடம் ஏமாந்துவிட்டான், மதுவைக் குடித்து மயங்கிவிட்டான், சூதாடிக் கடன்பட்டான், கலவரத்தில் கண்ணையிழந்தான், பாங்கி மூழ்கி பணத்தை யிழந்தான், அரசரின் காலடி வீழ்ந்தான், பிரபுவால் அவமானப்படுத்தப்பட்டான்,

விடையும் விளக்கமும்

பார்ப்பனீயத் துவேஷியாக இருந்து, பார்ப்பனத் துவேயஷிாக மாறுவது கருத்து வளர்ச்சியைக் குறிப்பதா? அல்லது பார்பனத் துவேஷியாக இருந்து பார்ப்பனீய துவேஷியாக மாறுவது கருத்து வளர்ச்சியைக் குறிப்பதா? இவற்றில் திராவிட முன்னேற்றக் கழகம் எதனைக் கருத்து வளர்ச்சியைக் குறிப்பதாகக் கருதுகிறது?

பார்ப்பனத் துவேஷியாக இருந்து பார்ப்பனீயத் துவேஷியாக மாறுவதுதான், கருத்து வளர்ச்சியைக் குறிப்பதாகும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது.

தென்னிந்திய நல உரிமைச் சங்கம் நீதிக் கட்சி என்று பெயர்பெற்றுப், பார்ப்னரல்லாதார் கட்சி என்று வழங்கப்பட்ட காலத்தில், நீதிக்கட்சியினர், அரசியல் ஆதிக்கங் கொண்ட பார்ப்பனர்களை வேறு பிரித்து, அரசியல் தாழ்ச்சியுற்றிருந்த பார்ப்பனரல்லாதார் நலத்திற்குப் பரிந்து பேசி வந்தனர்; வீழ்ச்சியுற்ற வகுப்பினர்க்கு உயர்ச்சி நல்க வகுப்புவாரி உரிமை கேட்டுவந்தனர். அப்பொழுது பார்ப்பனன் என்றால் அவனை அறவே ஒதுக்கிவிட்டுப், பார்பனரல்லாதான் என்றால் அவனுக்கு ஊக்கம் அளிக்கவேண்டும் என்ற முறையில் 'பார்ப்பனத் துவேஷம்' நீதிக்கட்சியினரால் கைக்கொள்ளப்பட்டது. அந்தத் துவேஷம் நீதிக்கட்சித் தலைவர்கள் எனப்படுவோரால் அரசியல் உலகு அளவுக்குத்தான் கடைப்பிடிக்கப்பட்டது; சமுக உலகு அளவில் 'துவேஷத்தைக் கடைப்பிடிக்க அவர்கள் முனையவில்லை; விரும்பவுமில்லை. பார்ப்பனத் துவேஷமும் பார்ப்பனரை அடியோடு அகற்றிவிடவேண்டும், அவர்களை ஒழித்துவிடவேண்டும் என்ற முறையில் நீதிக்கட்சியினரிடத்து வேலை செய்யவில்லை; பார்ப்பனர்களின் எண்ணிக்கை விகிதாச்சாரத்திற்கு ஏற்ப அரசியல் ஆதிக்கத்தை—ஏன் சற்று அதிக விகிதாச்சார ஆதிக்கத்தை அவர்களுக்கு அனுமதிக்கும் அளவுக்கு வேலைசெய்து வந்தது. நீதிக்கட்சி சேதுரத்தினம் அய்யர் என்ற ஒரு பார்ப்பனரைத்தனது மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ளும் அளவுக்கு செயலாற்றிவந்தது.

கடைசியாக வீட்டிலிருந்து கடன்காரர்களால் பிரிக்கப்பட்டான். கண் குருடாகி, வைக்கோல் மெத்தையில் வேதனையுடன் மெள்ளன் இருந்தான். குருடான கண் இனித் திரும்பவராது, ஆனால் சுத்த வேதாந்தியாகவேண்டுமென வீன் திட்டமிடாமல், அமைதியாக இருந்தால் அதுவே போதுமானதென்று அவனுக்குத் தோன்றியது.

தமிழகத்தில் தோன்றி வளர்ந்து வந்த பகுத்தறிவு இயக்கத்தைச் சார்ந்தோர், சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவதற்கும், பார்ப்பனர்கள் மட்டுமல்லாமல் பார்ப்பனரல்லாதாரைச் சேர்ந்த முதலியார், செட்டியார், நாயக்கர், பிள்ளை. படையாச்சி, கள்ளர், மறவர், அகப்படியர் போன்றவர்களும் சாதித்திமிரோடு இருப்பதற்கும், மூடச்சடங்குகள் குருட்டு நம்பிக்கைகள் மடப்பழக்க வழக்கங்கள் ஆகியவைகள் நிலவுவதற்கும் பார்ப்பனீயம் மூலகாரணமும், முக்கியகாரணமும் ஆகும் என்று கண்டறிந்தனர். திராவிடத்தில் பார்ப்பனீயத்தை வித்தூன்றியவர்கள் ஆதிநாள் பார்ப்பனர்கள் என்றாலும், அதனைக் காத்துவளர்த்து வருவதில் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் ஆகிய இருசாராரும் கண்ணுங்கருத்துமாக இருந்து வருவதைப் பார்த்தனர். எனவேதான் பகுத்தறிவியக்கத்தினர் பார்ப்பனீயம் யாரிடத்தில் காணப்பட்டாலும் அவர்களை வெறுப்பதும், பகுத்தறிவு நெறியாரிடத்தில் காணப்பட்டாலும் அவர்களைப் பாராட்டுவதும் ஆன பண்பில் ஈடுபட்டிருந்தனர். 'பார்ப்பனீய துவேஷமே' பகுத்தறிவாளர்களிடத்தில் காணப்பட்டது என்னலாம்.

பகுத்தறிவாளர்கள் நீதிக்கட்சியில் இணைந்து நின்று தொண்டாற்றிவந்த போது, அரசியல் துறையில் நீதிக்கட்சியின் கொள்கைக்கேற்ப 'பார்ப்பனர்களை' ஒதுக்கியும், சமுதா

யத்துறையில் சுயமரியாதை இயக்கக் கொள்கைக்கேற்ப ‘பார்ப்பனீயத்தை’ ஒதுக்கியும் வந்தனர். இந்தப்போக்கில்தான் பெரியார் இராமசாமியும், அறிஞர் அண்ணாவும் நீதிக்கட்சியிலிருந்து பணியாற்றிவந்தனர். அப்பொழுதும் நீதிக்கட்சி பார்ப்பனர்களின் எண்ணிக்கை விகிதாச்சாரத்திற்கு ஏற்ப அரசியலில் பங்கு பெற உரிமை அளித்தே பாடுபட்டுவந்தது. பார்ப்பனர்கள் காங்கிரஸ் அரசியலில் ஈடுபட்டு, அடாத செயல்கள் பல செய்துவந்த காலத்திலெல்லாம், அறிஞர் அண்ணா அவர்கள் ஆரியர்களை வெளியேற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும் என்று. ஆரியர்க்கு எச்சரிக்கை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அறிஞர் அண்ணா அவர்கள் ஆரியர்களை வெளியேற்றுவதைக் கொள்கையாக வகுக்கவுமில்லை; திட்டமாகத் தீட்டவுமில்லை; போராட்டமாகக் கொள்ளவுமில்லை; எச்சரிக்கையாகவே செய்தார்.

பிறகு நாளடைவில் வளர்ந்து வந்த சூழ்நிலையை உற்றுக்கவனிக்கும் போது, நீதிக்கட்சித்தலைவர்கள் அரசியலில் பார்ப்பனர்களை வெறுத்துவிட்டுச், சமூகத்துறையில் பார்ப்பனர்க்கு மண்டியிட்டுக்கிடப்பதைப் பெரியார் இராமசாமியும் அறிஞர் அண்ணாவும் கண்டார்கள். அந்த நிலை அவர்களுக்கு மிக்க வேதனையையும், வெட்கத்தையும் தருவதாக இருந்தது. சமூகத்துறையில் எந்தெந்த காரணங்களுக்காகப் பார்ப்பனர்களை வெறுக்க வேண்டிய அவசியம் பகுத்தறிவாளர்க்கு ஏற்பட்டதோ, அதே காரணங்கள் பார்ப்பனரல்லாதாரிடமும் ஏராளமாகப் பொதிந்து கிடப்பதைப் பெரியாரும் அண்ணாவும் கண்டார்கள். எனவேதான், நீதிக்கட்சியைப் பிற்போக்குவாதிகளிடத்திருந்து பிரிக்க எண்ணி, அதனை அரசியல்-சமுதாயம்-பொருளாதாரம் பற்றிய புரட்சிக் கருத்துக்கள் கொண்ட திராவிடர் கழகமாகச் சேலம் மாநாட்டில் மாற்றினார்கள்.

திராவிடர் கழகமான பிறகு, பார்ப்பனீயம் பார்ப்பனர்களிடத்திலிருந்தாலும் சரி, பார்ப்பனரல்லாதாரிடத்திலிருந்தாலும் சரி அது அடியோடு ஒழிக்கப்பட்டு, இருசாராரும் மனிதராக்கப்பட்டுத் திராவிடப் பண்பினராக மாற்றப் படவேண்டும் என்ற கருத்து தலைவர்களிடையே நிலவிற்று. அப்பொழுதுதான் “நமக்குவிரோதி பார்ப்பனீயமே யொழிய பார்ப்பனன் அல்ல” என்ற கருத்து பெரியார் இராமசாமியாலும், அறிஞர் அண்ணாவாலும் வற்புறுத்தப்பட்டுவந்தது. திராவிடர்க்குரிய கழகம் என்று கொள்ளுவது சாலச் சிறந்தது என்ற கொள்கை கழகம் ஒன்றாக நிலவிய போதே பலராலும் வற்புறுத்தப்பட்டுவந்தது. நீதிக் கட்சியாக இருந்தபோது கொள்ளப்பட்ட ‘பார்ப்பனர்களை’ வெறுக்கும் மனப்பான்மை, திராவிடக் கழகமாக மாறிய போது ‘பார்ப்பனீயத்தை’ வெறுக்கும் மனப்பான்மையாக மாறிற்று. அப்பொழுது பார்ப்பனத் துவேஷத்திலிருந்து பார்ப்பனீய துவேஷத்திற்கு மாறுவது கருத்து வளர்ச்சியின் அறிகுறி என்று பெரியார் இராமசாமியாலும், அறிஞர் அண்ணாவாலும் கழகத்தைச்சேர்ந்த அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றுவதற்கு முன்னால், எல்லோரும் திராவிடக்கழகமாக இருக்கும் போது, பெரியார் இராமசாமியின் பேச்சையும், எழுத்தையும் கூர்ந்து கவனித்தால், “நாம் தனிப்பட்ட பார்ப்பனர்களை வெறுக்கவில்லை; பார்ப்பனீயத்தைத்தான் வெறுக்கிறோம்” என்னும் கருத்து எங்கனும் தென்படக்காணலாம்.

பூணூலை அறுத்து விட்டுச், சாதி ஆசாரங்களை அறவே விட்டுவிட்ட பார்ப்பனர்கள் கழகத்தில் உறுப்பினர்களாய்ச் சேருவதையும், கழகத்தில் செயலாளர்களாய்ப் பணிபுரிவதையும் திராவிடக்கழகம் போற்றிப் பெருமைப் பட்டுக் கொண்டு வந்தது, அந்த நாட்களில்.

அறுக்கப்பட்டு வந்த பார்ப்பனர் பூணூல்களைச் சேர்த்து வைத்துக்கொண்டு, அவர்களின் பட்டியலை வெளிப்படுத்துவதிலே பூரிப்பும் பெருமையும் கொண்டவர்கள் அப்பொழுது இருக்கவே செய்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவதற்கு முன்னாலேயே, திராவிடக் கழகத்தில் பார்ப்பன உறுப்பினர்கள் இருக்கவே செய்தனர்; சில ஊர்களில் அவர்கள் செயலாளர்களாகக் கூட இருந்து பணியாற்றிவந்தனர்.

“திராவிடச் சுயஆட்சியில் பார்ப்பானும் பறையனும் இருப்பார்களா?” என்று கேள்வி கேட்கும் போதெல்லாம், பெரியார் இராமசாமி

அவர்கள், பார்ப்பனர்களெல்லாம் விரட்டியடிக்கப்படுவார்கள் அல்லது வெட்டிப் போடப்படுவார்கள் என்று கூறுவதில்லை; "பார்ப்பானும் இருக்கமாட்டான், பறையனும் இருக்கமாட்டான். மனிதன்தான் இருப்பான்" என்றே கூறிவந்தார். அதாவது திராவிடச்சுயஆட்சியில் பார்ப்பானும் பறையனும் மனிதர்களாக மாற்றப்படுவார்கள் என்று பொருள்.

பார்ப்பனர்களிடத்தில், அவர்கள் பார்ப்பனர்கள் என்பதற்காகத் தனிப்பட்ட முறையில் வெறுப்பு இல்லாத காரணத்தினாலும், பார்ப்பனீயத்தை மட்டுமே வெறுக்கும் கொள்கையைக் கொண்டிருந்த காரணத்தினாலும் தான் பெரியார் இராமசாமி, ஆச்சாரியாரை தனிப்பட்ட முறையில் திருவண்ணாமலையில் பார்த்துப்பேசினார்; மாலூர் சர்மா மாளிகையில் பயிற்சிப்பள்ளி நடத்தி அவர் அளித்த உண்டி, உறையுளை ஏற்றார்; தஞ்சைமாவட்டத்தில் ஒரு பார்ப்பனரையும், செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு பார்ப்பனரையும் தேர்தல்காலத்தில் ஆதரித்தார். பெரியாரின் கொள்கை 'பார்ப்பன துவேஷமாக' அப்பொழுதெல்லாம் இருந்திருந்தால், இவையெல்லாம் நடைபெற்றிருக்காதே!

திராவிடக் கழகத்திலிருந்து திராவிடமுன்னேற்றக் கழகம் பிரியும் போது, கழகத்தில் நிலவிவந்த பார்ப்பனீய வெறுப்புக் கொள்கையை அப்படியே ஏந்திக்கொண்டுதான் பிரிந்தது; இன்னும் அதே கொள்கையில் தான் இருந்து வருகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கூட பெரியார் இராமசாமி அவர்கள், சென்னை இலட்சுமிபுரம் யுவர் சங்கத்தில் தோழர் கே. எஸ். ராமசாமி சாஸ்திரிகள் தலைமையில் பேசும் போது, தமக்குத் தனிப்பட்ட பார்ப்பனர்களிடத்தில் வெறுப்பில்லை, பார்ப்பனீயத்திடத்து மட்டுந்தான் தமக்கு வெறுப்பு என்றும், தமக்குப் பார்ப்பன நண்பர்கள் பலர் உண்டு என்றும் பேசியுள்ளார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தார் அதே கொள்கையில் தான் இன்றும் நிலைத்து நிற்கிறார்கள்.

பார்ப்பன வெறுப்பிலிருந்து பார்ப்பனீய வெறுப்புக்குக், கருத்து வளர்ச்சி என்ற முறையில் தான், பெரியார் இராமசாமி, அறிஞர் அண்ணா உள்பட கழகத் தோழர்கள் எல்லோரும் வந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தார் அதே கருத்து வளர்ந்த நிலையில் தான் இன்னமும் நிற்கிறார்கள். ஆனால் திராவிடக் கழகத்தார் 'பார்ப்பனீய வெறுப்பிலிருந்து, இப்பொழுது 'பார்ப்பன வெறுப்பு'க்குத் தாங்கள் சென்றுள்ளதாகக் கூறிக் கொள்கிறார்கள். இந்த நிலை பார்ப்பன வெறுப்பிலிருந்து பார்ப்பனீய வெறுப்புக்கு வந்து, மீண்டும் பார்ப்பன வெறுப்புக்குப் போவதைத்தான் காட்டும். இதனைக் கருத்துவளர்ச்சியின் அறிகுறி என்று எங்ஙனம் கூற இயலும்?

பார்ப்பனர்களின் பூணூலை அறுத்து, அவர்களின் உச்சிக்குடுமிகளை நறுக்கி, அவர்களைக் கத்தியால் குத்தி, அவர்களுடைய வீட்டுக்கு நெருப்புவைத்துக் கொளுத்தி, அவர்களைத் திராவிட நாட்டிலிருந்து விரட்டியடிப்பது இயல்வதும் ஏற்றதுமான செயலா? அல்லது பார்ப்பனரல்லாதார் பலரையும் திருத்தி, அவர்களைப் பகுத்தறிவு நெறியில் நிறுத்திக், திராவிடத்திற்குரிய குடிமக்களாக ஆக்க முயலுவதைப் போல, பார்ப்பனரையும் திருத்திப், பகுத்தறிவு நெறியில் நிறுத்தித், திராவிடக் குடிமக்களாக ஆக்க முயலுவது இயலுவதும் ஏற்றதும் ஆன செயலா? என்று ஆராயும் போது பின்னதே இயலுவதும் ஏற்றதுமான செயல் என்று திராவிடமுன்னேற்றக் கழகம் உறுதியாகக் கருதிச் செயலாற்றிச் செல்கிறது. ஆனால், ஒன்று, தஞ்சை மாவட்ட மாநாட்டில் அறிஞர் அண்ணா அவர்கள் கூறியதைப்போல், திராவிடக்கழகத்தார் பார்ப்பனரை விரட்டியடித்து நாடு கடத்திவிட்டால், அவர்களைப் போய் திராவிட முன்னேற்றக் கழகத்தார் மீண்டும் அழைத்து வரமாட்டார்கள்!

பெரியார் இராமசாமி பார்ப்பனர்களை விரட்டி அடிக்கவேண்டும் என்று பேசி வருகிறார் என்றால், உண்மையாகவே அப்படிச் செய்வதற்காகவல்ல, அவர்கள் விரைவாகப் பார்ப்பனீயத்தன்மையை விடச் செய்யவே என்று கூடக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆச்சாரியார், மாலூர் சர்மா போன்ற பார்ப்பனர்களிடத்தில் கொண்டிருக்கும் நட்பு, பார்ப்பனர்களுக்கு வீடுகளை வாடகைக்கு விடுதல், பார்ப்பன வழக்கறிஞரைவைத்து வழக்கு நடத்துதல் போன்றவைகள் தனிப்பட்ட பார்ப்பனர்களிடத்தில் வெறுப்பில்லை என்பதையே காட்டுவனவாகும். எனவே உண்மையில் வெறுக்கப்படு

வது-வெறுக்கப்பட வேண்டியது பார்ப்பனீயமே என்பது புலனாகும்.

பார்ப்பனீயத்தைக் கொண்டுதான் பார்ப்பனர்களை வெறுக்க முற்பட்டோம்; வெறுப்புக்குக் காரணமான பார்ப்பனீயத்தை ஒழிக்க முற்படுவது, கருத்துவளர்ச்சியின் அறிகுறி என்பது மட்டுமல்ல, காரிய சாத்தியமான முறையுங்கூட, வைதிகப் பார்ப்பனரல்லாதாரைப் பகுத்தறிவு நெறிக்குத் திருப்புவது, எப்படி இயலும் ஒரு செயலாகக் கொள்ளுகிறோமோ, அதுபோலவே, பார்ப்பனர்களைப் பகுத்தறிவு நெறிக்குத் திருப்புவதும், சற்றுக் கடினமானதானாலும், இயலும் ஒரு செயலேயாகும்.

உங்களுக்கு "மன்றம்"
தவறாமல் கிடைக்க
சந்தாதாரராகச் சேருங்கள்

திங்கள் இருமுறை வெளியீடு

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7— 8—0
ஆறு திங்கள் ,,	3—0—0	3—12—0
தனி இதழ் ,,	0—4—0	0— 5—0

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண் சங்கு

சியக்காய்த்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் - ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

உரிமையாளர்: S. பெத்தண்ண நாடார்
3037-38, டபீர் குளம் ரோடு,
தஞ்சாவூர்.

தையற் கலை

கே. பி. சுந்தரம், G.C.T.

D. B. காலர் பிளவுஸ்

இந்த பிளவுஸ் முன்பக்கத் திறப்பு ஒன்றின் மேல், ஒன்று வளர்ந்தும், மூன்று பட்டன் துளையும், (காஜா) பட்டனும் கொண்டது. இதற்கு முழு நீளக் கையும், அரை நீளக் கையும் அமைக்கலாம். கைகளின் விளக்கம், 12-ம் இதழிலும், 13-ம் இதழிலும் காணவும்.

அளவுகள்

இடுப்புவரை முதுகு நீளம்	14½	அங்.
முழு நீளம்	17	,,
பாதித்தோள்	6½	,,
மார்புச் சுற்று அளவு	34	,,
இடுப்புச் சுற்று அளவு	27	,,

1-ல் இருந்து 0 வரை 17½ அங்.
(முழு நீளம்+½ அங்.)
2-ல் இருந்து 0 வரை 14¼ அங்.
(இடுப்புவரை முதுகு நீளம்+¼ அங்.)
3-ல் இருந்து 0 வரை 7¼ ,,
(¼ மார்பளவில் 1¼ அங். குறைவு)
4-ல் இருந்து 0 வரை 1 அங்.
5-ல் இருந்து 0 வரை 2¼ அங்.
(1/8 மார்பளவு+½ அங்.)
6-ல் இருந்து 0 வரை 6¾ ,,
(பாதித்தோள்+¼ அங்.)
7-ல் இருந்து 6 வரை ¾ ,,
8-ல் இருந்து 6 வரை நேர்கோடு இணைக்க.
9-ல் இருந்து 3 வரை 9¾ ,,
(¼ மார்பளவு+1¼ அங்.)
10-ல் இருந்து 2 வரை 9¾ அங்.
11-ல் இருந்து 1 வரை 9¾ ,,
12-ல் இருந்து 11 வரை ½ ,,
13-ல் இருந்து 10 வரை ¾ அங்.
14-ல் இருந்து 18 வரை 20 அங்.
(முழுநீளம் +3 அங்.)
15-ல் இருந்து 14 வரை 7¼ அங்.
(¼ மார்பளவில் 1¼ அங். குறைவு.)
15-ல் இருந்து 9 வரை 10 அங்.
(¼ மார்பளவு+1½ அங்.)
16-ல் இருந்து 14 வரை 14¾ ,,
16-ல் இருந்து 10 வரை 10 ,,
17-ல் இருந்து 14 வரை 17½ ,,
17-ல் இருந்து 11 வரை 10 ,,
18-ல் இருந்து 19 வரை படத்தில் உள்ளபடி வளைவாக இணைக்கவும்
19-ல் இருந்து 11 வரை ½ அங்.
(19, 18 இணைப்பு)
20-ல் இருந்து 10 வரை ¾ ,,
21-ல் இருந்து 14 வரை 3 ,,
(1/8 மார்பளவு+¾ அங்.)
22-ல் இருந்து 14 வரை 7 ,,
(பாதித்தோள்+½ அங்.)
23-ல் இருந்து 22 வரை ¾ அங்.
24-ல் இருந்து 22 வரை நேர்க்கோடு இணைக்க
25-ல் இருந்து 15 வரை 2¼ அங்.
(1/8 மார்பளவு)
26-ல் இருந்து 18 வரை 2¼ அங்.
(1/8 மார்பளவு)
27-ல் இருந்து 25 வரை 2¼ ,,
(1/8 மார்பளவு)
28-ல் இருந்து 27 வரை 3¼ ,,
29-ல் இருந்து 28 வரை 3¼ ,,

(தொடரும்)



பரிமளம் பிக்சர்ஸ்

சொர்க்கவாசல்

கதை, வசனம்.. அறிஞர் அண்ணா

இனிய இசையுடன்... கவர்ச்சியான காட்சிகளுடன்
நேர்த்தியான நடிப்புடன்.... அழகு நடையுடன்...

கோதானப்புரட்டு
பழங்கால விளக்கம்
அருள்விற்கும் அக்ரமம்
போலிசாதுவின் மோசடி
காதலும் கடமையும்

பழந்தமிழர் நெறி
கலை வலையுடன், மதம்
அறநெறியின் மாண்பு
அறப்போர் உள்ளம்
மக்களாட்சி மாண்பு

எனும் பிரச்சினைகளைப் புத்துலக விருந்தாக்கித் தருகிறது.
பார்க்கப் பார்க்கப் பூரிப்புடன் பண்பும் பாடமும் தரும் பேசும் படம்!
அறிவியக்கம் தரும் அரிய விருந்து!

மகிழ்ச்சி பொங்கும்! மதி துலங்கும்!

சொர்க்கவாசல்

சோபிதத்தை சிறப்பிக்க

K.R. ராமசாமி — பத்மினி — அஞ்சலி

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. ., at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.